பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்

THINAPPUYAL
திනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 434



## வெடுக்குநாறி மலையில் பௌத்த பேரினவாத அராஜகம் – மதவாத அடிமைகளாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள்



## ரணிலின் தேசியக் கொள்கையும், ஆதரிக்கும் அரசியல் தலைமைகளும்



## துரோகியாகச் சித்தரிக்கப்பட்ட சிவராம் மாமனிதரான வரலாறும், எதிரியாகிய அன்ரன் பாலசிங்கமும்

A. KUNARATNAM
TYRE CENTER
NO: 142/1, HORAPATHANA ROAD, VAVUNIYA. TEL: 222 1574 / 0778951584. வவுனியா


# வெடுக்குநாறி மலையில் பௌத்த பேரினவாத அராஜகம் – மதவாத அடிமைகளாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள்



வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலய மகா சிவராத்திரி பூஜை ஏற்பாடுகளுக்கு சென்ற பூசகர் சிவத்திரு மதிமுகராசாவை கைது செய்தமை மிகப் பாரதூரமான சைவத் தமிழர்களின் அடிப்படை வழிபாட்டுரிமையை மீறும் செயல் என சைவ மகா சபை கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது. இது குறித்து சைவ மகா சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களாக,

"உலகம் பூராகவும் உள்ள சைவர்களின் மிக உன்னதமான முதன்மையான விரதம் சிவராத்திரி ஆகும். அந்தவகையில் வன்னி சிவப்பிராந்தியத்தில் வவுனியா மாவட்டத்தில் உள்ள தமிழ்ச் சைவர்கள் தொன்று தொட்டு வழிபட்டு வரும் ஆதி சிவன் கோவிலின் மகா சிவராத்திரி வழிபாடுகளுக்கு சென்ற பூசகர் மிக மோசமான முறையில் கைது செய்யப்பட்டமையும் பக்தர்களின் வழிபாடுகளிற்கு, ஆலய பரிபாலன சபையினரின் பூஜை ஏற்பாடுகளுக்கு பலத்த இடையூறு விளைவிக்கப்பட்டு துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டமை சைவசமயிகளிற்கு தாங்கொணாத வலியை ஏற்படுத்தி உள்ளது.

இது இலங்கையின் சைவ சமயிகளின் வழிபாட்டு உரிமைக்கு விடுவிக்கப்பட்ட பாரிய அச்சுறுத்தலும் அதேநேரம் சைவ சமய மதகுருவை மோசமாக நடாத்தி கைது செய்தமை மன்னிக்க முடியாத பாரதூரமான சம்பவமாகும். உடனடியாக பூசகர் சிவத்திரு மதிமுகராசாவை விடுதலை செய்யவேண்டும் என வலியுறுத்துவதுடன் நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி தன்னிச்சையாக செயற்பட்ட நெடுங்கேணி காவல் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் காவல்துறையினர் மீது அரசு உரிய ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்ள வலியுறுத்தி நிற்கின்றோம்.

மிகுந்த இன்னல்களை தொடர்ச்சியாக சந்தித்து எமது பூர்வீக வழிபாட்டு உரிமையை விட்டுக்கொடுக்காத அதற்காக இத்துணை தியாகங்களை செய்து வரும் வெடுக்குநாறி மலை ஆதி சிவனின் தமிழ்ச் சைவக் குடிகளிற்கு தலைமைப் பூசகர் மற்றும் பரிபாலன சபைக்கு முழுமையான ஆதரவை வெளிப்படுத்தி நிற்கின்றோம். இந்த உன்னத சைவர்களின் வழிபாட்டின் நாளான மகா சிவராத்திரி தினத்திலே ஏற்பட்டுள்ள அனைத்து துன்பங்களையும் தீர்த்து அருள் புரிய முழுமுதற் பரம்பொருள் ஆதி சிவனை மனமுருகிப் பிரார்த்திக்கின்றோம்." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் சிவராத்திரி தினத்தன்று இடம்பெற்ற இப்போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்பது மக்களின் விமர்சனத்திற்குள்ளாகியிருக்கும் அதேநேரம் இவர்கள் பௌத்த - கத்தோலிக்க ஆதரவாளர்களா என எண்ணத்தோன்றுகின்றது. அல்லது அரசின் நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்ப செயற்படுகின்றார்களா?

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில்சிவராத்திரி உற்சவம்நடைபெற்று கொண்டிருந்த நிலையில் மாலை 6 மணியுடன் அனைத்து வழிபாடுகளையும் முடிவுக்கு கொண்டு வருமாறும், பொலிஸாரின் கட்டளையை மீறும் பட்சத்தில் குறித்த நபர்கள் கைது செய்யப்படுவார்கள் என பொலிஸார் தெரிவித்திருந்தனர். பூஜை வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது கலகம் அடக்கும் பொலிசார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் ஆலயத்தில் குவிக்கப்பட்டு மிக மோசமாக பொலிஸார் நடந்துகொண்டமை வேதனைக்குரியது.

காலணிகளுடன் ஆலயத்திற்குள் புகுந்த பொலிசார் பெண்களையும் அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தினர். இதன்போது ஆலய நிர்வாகத்தினர் உள்ளிட்ட வழிபாடுகளில் கலந்துகொண்ட 8 பேர் கைது செய்யப்பட்டதுடன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மீதும் தாக்குதல் மேற்கொண்ட பொலிசார், அவரை தூக்கிச் சென்றதையும் அவதானிக்க முடிந்தது. கைது செய்யப்பட்டவர்கள் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வெடுக்குநாறி மலையின் தொன்மையையும், அதன் வரலாற்றையும் உற்றுநோக்குகின்றபோது, தமிழ் மக்களின் தொன்ம வழிபாட்டிடங்களில், வெடுக்குநாறி மலை ஆதிசிவன் முக்கியமானவர். காட்டின் இயற்கைச் சூழலுக்கு சேதம் விளைவிக்காது, அப்பகுதி மக்களால் காலங்காலமாக வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. கடந்த சில வருடங்களாக, ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது. இந்த நிலையிலேயே, ஆலய விக்கிரகங்கள் அழித்தொழிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில், அரச ஆதரவுடன் பௌத்த அடிப்படைவாதத்தின் அடாவடிகளை செயற்படுத்தும் நிறுவனமான தொல்லியல் திணைக்களம், தொடர்ந்தும் தனது அடாவடிகளை முன்னெடுத்து வருகின்றது. தொல்லியல் திணைக்களத்தை நாட்டின் அதியுச்ச அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாலோ, நீதிக் கட்டமைப்பான நீதிமன்றங்களாலோ கூட கட்டுப்படுத்த முடிவதில்லை. தொல்லியல் திணைக்களம் நினைத்தால், தமிழர் தாயகப் பகுதிகளில் எதை வேண்டுமானாலும் ஆக்கிரமித்துக்

## வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் மௌனம்

கொண்டு, தொல்லியல் நிலப்பகுதி என்று அறிவித்துக்கொண்டு, பௌத்தவிகாரைகளை அமைக்க முடியும் என்பதுதான் இப்போதைய நிலை.

முல்லைத்தீவு, குருந்தூர் மலையிலும் நீதிமன்ற உத்தரவுகளை மீறி, பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருகின்றது. அதற்கு, தொல்லியல் திணைக்களத்தின் உத்தரவுகளுக்கு அமைய, அரச கட்டமைப்புகள் உதவிகளைப் புரிந்து வருவதாக மக்கள் குற்றஞ்சாட்டி வருகிறார்கள். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்தது முதல், தமிழர் தாயகப் பகுதிகளில் பௌத்த அடையாளங்களை வலிந்து ஏற்படுத்தும் வேலைகளை, தொல்லியல் திணைக்களமும் பௌத்த அடிப்படைவாத சக்திகளும் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றன. பொருளாதார மற்றும் சமூக ரீதியாக நாடு எவ்வளவு படுபாதாளத்துக்குள் வீழ்ந்து கிடந்தாலும் பரவாயில்லை. ஆனால், பௌத்த அடிப்படைவாதத்தின் செயற்பாடுகளை நிறுத்தக்கூடாது என்பது, தென் இலங்கையின் ஆக்கிரமிப்பு சக்திகளின் எண்ணம்.

இலங்கையை எண்ணிக்கை அடிப்படையில், சிறுபான்மையினர் அல்லாத பௌத்த சிங்கள நாடாக நிறுவிக்கொள்ள வேண்டும் என்பதற்காக, எவ்வளவு விலையை வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராகிறார்கள். அது வரலாற்று ரீதியாக கடத்தப்பட்டுவரும் பௌத்த அடிப்படைவாத மனநிலையில் இருந்து வரும் ஒன்றாக கருத முடியும். நாடு முழுவதும் புத்தர் சிலைகளை வைத்து நிரப்புவதன் மூலம், இந்த நாட்டின் வரலாற்றை போலியாக எழுதி, பௌத்த சிங்கள நாடாக எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்கும் மகாவம்ச மனநிலையின் விளைவுகள்தான் நாட்டை பாரிய பின்னடைவுக்குள் தள்ளியது. ஆனால், அதிலிருந்து கிஞ்சித்தும் பாடம் படிக்க வேண்டும் என்ற எண்ணம், பௌத்த அடிப்படைவாத சக்திகளுக்குக் கிடையாது.

உலக வரலாற்றில், 'வென்றவர்களால் எழுதப்படுவதுதான் வரலாறு' என்ற நிலை உண்டு. ஆனால், ஒருபோதும் அது உண்மைகளைக் கொண்டிருப்பதில்லை. அதில் புனைவுக்கதைகளும் போலிகளும் சேர்க்கப்பட்டு, வென்றவர்களின் மனங்களைக் குளிர வைப்பதற்கான உள்ளீடுகள் வைக்கப்படும். காலங்கடந்து நோக்கப்படும் போது, அந்த வரலாறு சிரிப்பை வரவழைக்கும் ஒன்றாக மாத்திரமே மிஞ்சும். போலிப் புனைவுகளாக எழுதப்பட்ட 'வெற்று வெற்றி' வரலாறுகளை, காலில் போட்டு காலம் மிதித்திருக்கின்றது. அதுபோல, வென்றவர்கள் என்ற நிலை காலத்துக்கு காலம் மாறி வந்திருக்கின்றது. காலமும் சூழலும் வென்றவர்களை மாற்றி வந்திருக்கின்றது. அந்த உண்மையை உணராமல், காணும் இடங்களில் எல்லாம் புத்தர் சிலைகளை வைப்பதாலும், சைவ சமயச் சின்னங்களை அழித்தொழிப்பதன் மூலமும் பௌத்த நாடு என்று நிறுவ முடியும் என்பதும் நகைப்புக்கிடமான செயலாகும். அதிக தருணங்களில் ஆக்கிரமிப்பாளர்கள் அடிப்படையில் தாழ்வுச் சிக்கலோடு இருப்பவர்களாகவே இருந்திருக்கிறார்கள். இப்போது, தொல்லியல் திணைக்களமும், அதன் ஏவல் சக்திகளாக இயங்கும் பீடங்களும் வெளிப்படுத்துவது அதையேதான்.

கச்சதீவில் புத்தர் சிலை அமைக்கப்பட்டமை, நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை பௌத்த சின்னமாக அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தமை, நிலாவரைக் கிணற்றடியில் புத்தர் சிலை வைக்கப்பட்டமை, வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கேஸ்வரர் அகற்றப்பட்டமை.... இப்படி தொல்லியல் திணைக்களமும் அதன் இணக்க சக்திகளும் வடக்கு, கிழக்கில் புரிந்த ஆக்கிரமிப்பு ஆட்டங்கள் அளப்பரியன.

தமிழ் மக்களின் எதிர்ப்பை அடுத்து, வெடியரசன் கோட்டை ஆக்கிரமிப்பு அறிவித்தல் அகற்றப்பட்டிருக்கின்றது. அதுபோல, நிலாவரைக் கிணற்றடியில் வைக்கப்பட்ட புத்தர் சிலையும் அகற்றப்பட்டிருக்கின்றது. ஆனால், கச்சதீவில் எந்தவித கட்டுமானங்களையும் முன்னெடுக்கக்கூடாது என்பதையும் மீறி வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையும் அதனை ஒட்டிய கட்டுமானமும் அகற்றப்படவில்லை. இப்போது வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் அகற்றப்பட்ட விடயம் பேசு பொருளானதும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆதிலிங்கேஸ்வரரின் விக்கிரகங்களை மீள பிரதிஸ்டை செய்யுமாறு பணித்திருக்கின்றார். ஆனால், இவ்வாறான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை வெவ்வேறு காரண காரியங்களைச் சொல்லிக்கொண்டு தொல்லியல் திணைக்களம் முன்னெடுக்கவே செய்யும்.

நல்லாட்சிக் காலத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்தோடு மிக இணக்கமாக இருந்தது. நினைத்த மாத்திரத்தில் ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்தித்து பிரச்சினைகளை பேசும் நிலை இருந்தது. அப்போது, கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், "....தொல்லியல் திணைக்களத்தை ஆட்சித் தலைவர்களால் கட்டுப்படுத்த முடியாது. அங்கு இருப்பவர்கள் எல்லாரும், பௌத்த அடிப்படைவாதத்தை முன்னெடுப்பதற்காக தெளிவாக பயிற்றுவிக்கப்பட்டவர்கள். அவர்கள், ஆட்சித் தலைவர்களின் உத்தரவுகளை ஒரு பொருட்டாகக் கூட மதிப்பதில்லை. அவர்களைப் பொறுத்தவரையில், பௌத்த உச்சபீடங்கள்உத்தரவுக்குசெயற்படுவதுதான ஒற்றைச் சிந்தனை. ஆட்சியில் இருப்பவர்கள் ஐந்து, ஆறு ஆண்டுகளில் மாறக் கூடியவர்கள். அவர்களை கருத்தில் எடுக்க வேண்டியதில்லை என்பது எண்ணம். தொல்லியல் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பு தொடர்பில், அரசாங்கத்தோடு கூட்டமைப்பு பேசும் போதெல்லாம், அங்கு வரும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் இப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அடிப்படைவாதம் ஊறிப்போயிருக்கிற அமைப்புக்கு எதிராக, தமிழ் மக்கள் விழிப்போடு இருப்பதுதான் ஒரே வழி. அதனை மீறி, யாரை நம்பியும் சும்மா இருந்துவிட முடியாது" என்றார்.

நாட்டுக்குள் இன மத முரண்பாடுகளை தோற்றுவிக்கும் நடவடிக்கைகளில் பௌத்த அடிப்படைவாத சக்திகள் காலம் காலமாக ஈடுபட்டு வந்திருக்கின்றன என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், இப்போது வடக்கு, கிழக்கில் இந்தியாவின் இந்துத்துவா சக்திகள், புதிய நிகழ்ச்சி நிரலோடு நுழைந்து தமிழ் மக்களிடம் காணும் ஒற்றுமையை சூறையாடி வருகின்றன. அதற்கு இங்குள்ள சிலரும் துணைபோவதுதான் பெரும் அவலம். (12ஆம் பக்கம் பார்க்க...)

இரணியன்

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## வாய்ப்பேச்சில் மட்டும் போகும் நல்லிணக்கம்

எமது நாட்டில் இன நல்லிணக்கம் என்பது சுதந்திரம் அடைந்ததன் பின்னர் காணாமல் போய்விட்டது. இந்த நல்லிணக்கம் காணாமல் போவதற்கு முக்கிய காரணமாகத் திகழ்வது மத நல்லிணக்கம் தான். இலங்கையில் பௌத்த மேலாதிக்கமானது ஏனைய இனங்களான தமிழ், முஸ்லீம், பறங்கிய இனங்களின் அவர் சார் மதங்களையும் இல்லாதொழித்து பௌத்த பேரினவாத சிந்தனையுடன் மற்றைய இனங்களை அடக்கியாள முனைகின்றது. இந்த நிலைப்பாட்டால் கடந்த 30 ஆண்டுகளாக இரத்த ஆறு ஓடியது. பல இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். இன்றைய பாரிய பொருளாதார நெருக்கடிக்கும் அடித்தளமிட்டுச் சென்றது. இன்று எமது நாடு வங்குரோத்து நிலையில் உள்ளது. இங்கு வாழ் மக்களின் 60 வீதமானவர்கள் ஒரு நேர உணவுடன் வாழ்ந்து வருகின்றனர். பொருளாதார நெருக்கடியின் உச்சக்கட்டமாக தற்கொலைகள் இடம்பெறுகின்றன.

இந்நிலையில் கடந்தகால கசப்பான விடயங்களைக் களைந்து இனிவரும் சமுதாயமானது ஒரு சுபீட்சமான வழியில் பயணிக்க அனைத்து மதங்களும் ஒன்றிணைந்து செயற்பட அவசியமான நிலை தோன்றியுள்ள நிலையில் "பழைய குருடி கதவைத் திறவடி" என்ற நிலையாக நில அபகரிப்பு, பௌத்த விகாரைகளை சம்பந்தமில்லாத பகுதிகளில் நிறுவுவது, இந்து சமய விழாக்களை தடைசெய்வது, மத அனுஸ்டானங்களை அவமதிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

தற்போது வெடுக்குநாறி மலையில் சிவராத்திரி விழா செய்வதற்கு நீதிமன்றம் அனுமதித்த நிலையில் பிக்குகளும் பொலிசாரும் இராணுவமும் விழாவை தடைசெய்வதும், மத அனுஸ்டானங்களை தடுப்பதும், கலந்துகொள்பவர்களை கைதுசெய்வதும், பெண்களை துன்புறுத்துவதும் வருத்தமளிக்கக்கூடிய விடயங்களாக உள்ளது. இவ்வாறான செயற்பாடுகளானது மத நல்லிணக்கம் கைகூடி வரப்போவதில்லை என்பதுடன், இனிவரும் சமுதாயம் கூட இன முரண்பாட்டுடன் தான் கடந்து செல்லப்போகின்றது என்பதையே வெளிக்காட்டி நிற்கின்றது.

இது தனியே பௌத்த பிக்குகளுக்கு மட்டுமல்ல, இந்து கிறிஸ்தவ இஸ்லாமிய மதப் பெரியோர்களும் மத பித்துப்பிடித்து செயற்படுவது ஆரோக்கியமான விடயமல்ல. மக்களை நல்வழிப்படுத்தவே மதங்களும் குருமார்களும். ஆனால் மதவெறி பிடித்து இனங்களுக்கிடையில் குரோதங்களை உருவாக்குவதை மதப் பெரியோர்கள் நிறுத்தவேண்டும். இன்றைய உலகம் மூன்றாம் உலக யுத்தத்தை நோக்கி நகர்கின்றது. இதனை உன்னிப்பாக கவனித்தால் இந்த யுத்தம் மத அடிப்படையில் தான் உருவாகப்போகிறது என்பது திண்ணம்.

எனவே மதத் தலைவர்கள் விசமப் பிரச்சாரத்தைத் தூண்டிவிடுவதும் தமது சுயலாபத்திற்காக செயற்படுவதும் எமது நாட்டிலுள்ள இளம் சமுதாயத்திற்கு பெரும் அழிவை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து செயற்படவேண்டும். இளம் சமுதாயம் மத இன வெறியர்களின் போலியான பிரச்சாரங்களில் அகப்படாமல் உங்களைக் காப்பாற்றிக்கொண்டு தேசத்தை மீட்டெடுக்க ஒன்றிணைவோம். அனைத்து இனங்களும் மதங்களும் ஒன்றிணைந்து எமது நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்போம். மதவெறிதான் உங்களுக்கு முக்கியமாகப்பட்டால், நாட்டை மட்டுமல்ல, இவ்வுலகத்தையும் எந்தக் கடவுளாலும் காப்பாற்ற முடியாது.



33

## பல்துறை எழுத்தாளர் புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்

நித்தியக் கல்யாணி பூக்கள், சாத்தை அந்த நாள் ஞாபகங்களை அசைப் போட வைத்தன.

வானில் 'சுப்பர் சொனிக்' விமானம் வட்டமிடுகின்றது. வன்னியில் மணலாறு பகுதியில் ஓயாது துப்பாக்கி சப்தங்களும் குண்டு சப்தங்களும் காதுகளைக் கிழிக்கின்றன. 'பெண் போராளிகள் 150 பேர் ஒரே தடவையில் போனதாக மாண்டதாக ஊருக்குள் கிசு கிசுப்பு.

'சுப்பர் சொனிக்' கொஞ்சம் கீழே பதிந்தது" ஊரெங்கும் புகை மண்டலம்" ஒரு குடும்பமே கிணற்றுக்குள் அமிழ்ந்தது" ஊரே அல்லோலகல்லோலம். பாடசாலை மாணவர்கள் அனைவரும் பதுங்கு குழிகளில். கிணறு தோண்டும் 'சுப்பர் சொனிக்'கு இந்த பதுங்கு குழிகள் எம் மாத்திரம். பதுங்கு குழிகள் மேல் நேரடியாக குண்டுகள் விழும் மட்டும் மாணவர்களுக்குப் பாதுகாப்பு.

கா.பொ.த.சாதாரண தரம் படித்துக் கொண்டிந்த சாத்துக்கு வன்னி மண்ணில் காலடி எடுத்துவைத்ததற்கு இதுவே முதல் அநுபவமும் சம்பவமும். ஒரு பதுங்கு குழிக்குள் இருபது மாணவர்களும் மாணவிகளும் நெருக்குப்பட்டனர்.

சிறிது நேரத்தில் ஊரே மரண வாசனை. ஒரே வீட்டில் இரண்டு மூன்று மரணங்கள். மாங்குளம் வைத்தியசாலையில் தாதியாக பணிபுரிந்த, ரஞ்சினிக்கு நான்கு பெண் பிள்ளைகள். ரமணி மூத்தவள். நேற்று வரை ஊர்ப் பாடசாலையில் நல்ல தலைமைத்துவம் கொண்ட மாணவியாக வலம் வந்தாள். அவளின் சுறுசுறுப்பைக் கண்ட, பாடசாலை சமூகம், ஊர்ச் சமூகம் அவளின் மீது மதிப்பு கொண்டன. பாடசாலை முதல்வரின் அனுமதி பெற்றோ, வலுக்கட்டாயமாகவோ, வேறு எந்த வகையிலேயோ இயக்கத்துக்கு ஆள் சேர்க்கும் பிரசார பிரிவினர் புகுந்து மூன்று அல்லது இரண்டு பாட வேளைகளைத் தங்களது தேவைக்குப் பயன்படுத்திக்கொள்வார்கள். ரமணியும் அவ்வாறு முதல் நாள் கழுத்தில் நஞ்சு மாலை சுமக்க சென்றவள் அடுத்த நாள் கழுத்தில் பட்டிப்பூக்களின் மலர்மாலையுடன், சவப்பெட்டியில் மீளா உறக்கத்தில் கொண்டுவரப்பட்டாள். கிசு கிசுப்பு உண்மையாகியது. ஊர் அழுது அழுது களைத்துவிட்டது. மக்களின் கண்களில் கண்ணீர் வற்றிவிட்டது. விமானம் சென்று விட்டது. பாடசாலை மாணவர்கள் வெளியில் வந்தார்கள். இயக்கத்தின் உழவு இயந்திரம் ஊரில் ஆண்கள் சிலரையும் பாடசாலையில் மாணவர்கள் சிலரையும் ஏற்றிக்கொண்டு புதைகுழிகள் வெட்டுவதற்காக ஆலங்குளம் துயில் இல்லத்தை நோக்கிச் சென்றது.

கோடைக்காலம் - நிலம் கடும் இறுக்கமாக இருந்தது. மண்வெட்டிகளும் பிக்கான்களும் அலவாங்குகளும் (கடப்பாரைகள்) நிலத்தில் பட்டு திரும்பவும் தெறித்தது. இங்கு நூறு பூதவுடல்களும் மிச்சம் முள்ளியவளை துயில் இல்லத்திலும் விதைக்கப்படுவதாக நம்பத்தகுந்த உறுதிப்படுத்தப்பட்ட செய்தி ஒன்று வலம் வந்தது. காலை ஒன்பது மணிக்கு வெட்ட தொடங்கி மாலை மூன்று மணியளவில் முக்காவாசி கிடங்கு வெட்டியதாயிற்று. சிலருக்கு பாணும் பருப்பும் சாப்பிட்டு தொடர்ச்சியான வயிற்றோட்டம்.

கல்லறைகளில் வீரவணக்கம் பொறிக்கப்பட்டு, ஒவ்வொரு கல்லறையும் ஒவ்வொரு கனவை சுமந்தவாறு காட்சியளிக்கின்றது. கண்ணாடி கற்களில் மாவீரர்களின் பெயர்களும் மலர்வும் உதிர்வும் நிலையும் இயற்பெயரும் புனை பெயரும் பதியப்பட்டு காட்சியளிக்கின்றன. சில கல்லறைகளில் புதிய புதிய பூமாலைகளும் பூக்களும் ஆங்காங்கே மெழுகுவர்த்திகளும் எண்ணெய் விளக்குகளும் கண்களைப் பறிக்கின்றன. கவனிப்பார் இன்றி கிடக்கும் சில கல்லறைகளில் இயற்கை அவற்றின் மேல் இறக்கம் கொண்டு, சுடுகாட்டு மல்லிகைச் செடிகளை அருகில் படைத்து, வெள்ளை, இளஞ்சிவப்பு பூக்களைப் பூக்க வைத்துள்ளது.

குழிகளில் மண்ணை அள்ளிக் கொண்டிருந்த சாத்தின் வயிறும் தொல்லை கொடுத்தது. மயானத்துக்குச் சற்று தொலைவில் அடர்ந்த மரங்களைக் கொண்டு காட்சியளித்த முல்லை நிலத்தின் பக்கமாக மெதுவாக நகர்ந்தான். கட்டின் சிறிய பற்றை மறைவில் அமர்ந்தான். 'புர்ஊ, புர்ஊ..புர்ஊ...' - அரவத்துடன் தன்னை மறந்து மலம் கழித்தான். வயிற்றில் இருந்து வெளிவந்த வாயுவின் சப்தத்தினால், நிசப்தமாக இருந்த காட்டில் இரை தேடிக்கொண்டிருந்த மயில் 'மீயாவ்.மீயாவ்..மீயாவ்'... அகந்தன.

காட்டில் பூத்திருந்த வெள்ளை நிற காட்டுப் பூக்களின் இதழ்கள் சாத்தின் மலத்தினாலும் சிறுநீரகத்தினாலும் நனைந்து. அவனது பிறந்த மேனியையும் தங்களின் பாவப்பட்ட பிறப்பையும் எண்ணி மௌன மலர்களாக புன்னகித்தன. அவனோ அவற்றைப் பொருட்படுத்தாமல், மஞ்சள் வைத்து காட்டுப்பூக்களை நீராட்டுவது போல, முக்காவாசி உடைந்த மண்பானையால் தனது அடியைக் கழுவ, அந்த ஜலமானது பூக்களின் மீது பட்டு பன்னீராக மாறியது. எல்லா இடங்களிலும் - பருவங்களிலும் உயிர்காக்கும் மருந்தாக திகழும் காட்டுப்பூக்கள் மனித இனத்தை எண்ணி வெட்கி நாணமுற்றன. சாத் எழுந்த போது அவன் பூக்களை அசிங்கபடுத்திவிட்டதை கண்டான். அவை காட்டுப் பூக்கள் தானே, அசமந்தமான அசட்டத்தனமான போக்கில் அந்த விடயத்தைப் பொருட்படுத்தவில்லை. மலத்தை இதழ்களில் சுமந்த பூக்கள் பாரத்தில் சுவாசிக்கத் திணறின" சில பூக்கள் பாரத்தால், உதிர்ந்தன" சில பூக்களின் ஓரிரு இதழ்கள் பிய்ந்து, பயனற்று போய் விட்டோமே. மனதுக்குள் குற்றுயிராய் வேதனைப்பட்டன. சில மொட்டுக்கள் மலருவதற்குத் தயாராகி விட்டன.

யூஜீனும் சதிஸ்சும், சாத் எங்கே? - சிந்தனையில் வீதியின் பல பக்கங்களும் கண்களால் துளாவிய வண்ணம் வரும்போது, சாத், வீதியில் நிற்பதைக் கண்டு விட்டார்கள். இருவரும் ஒரே தறுவாயில்
"சாத்.சாத்..." - கத்தினார்கள்.

மாலைப் பொழுதில் கடற்கரை வீதியில் காற்று 'சோ.சோ..' என வீசியதாலும் கடற்கரைக்குப் பொழுதைக்கழிக்க வந்தவர் களினதும் தீன் பண்ட விளையாட்டுப் பொருட்களின் வியாபாரிகளினதும் சப்தத்தினால், இவர்கள் கத்தியது அவனது செவிகளில் விழவில்லை. இருவரும் அருகில் சென்றார்கள். யூஜீன் தனது வலக்கையை, சாத்தின் இடத் தோளின் மீது வைத்து,
"சாத். உனக்கு என்ன நடந்திச்சு? ஏன் சொல்லாமல் கொள்ளாமல் இஞ்ச வந்து நிக்கிறாய்?"

திடுக்கிட்ட சாத் திரும்பிப்பார்த்தான். அவன் எதிரே இருவரும் நின்றார்கள். அவர்கள் இருவரும் சாத்தின் முகத்தில் ஏதோவொரு பயவுணர்வு தென்படுவதை உணர்ந்து கொண்டாலும் வெளிப்படையாக காட்டிக்கொள்ளவில்லை. சாத் கணப் பொழுதில் தன்னை சுகாகரித்துக்கொண்டு,
"எனக்கு தெரிஞ்ச ஆளைக் கண்டனான். அதான் அவரோட கதைப்பம் என்று ஓடி வந்தனான். நீங்கள் எப்படியும் இந்த றோட்டில்தானே வருவீங்கள் என்று சொல்லாமல் வந்துட்டன். என்னை மன்னிச்சிக்குங்கோ"

சாத் வழமைக்கு மாறாக தடுமாற்றத்துடன் கதைப்பதை வைத்துக்கொண்டு, அவனுக்கு ஏதோவொன்று நடக்கக் கூடாதவொன்று நடந்து விட்டது என்பதை ஊகித்துக் கொண்ட யூஜீன்,
"சாத் பொய் சொல்லுறாய். உனக்கு என்ன நடந்திச்சு. பயப்பிடாமச் சொல்லு நாங்க இருக்கிறம்"
"ஒண்டும் இல்லை. தெரிஞ்ச ஆள் மாதிரி இருந்திச்சு அவரத்தான் பாக்க வந்தனான்."
"பொய் சொல்லாத"

யூஜீன், சாத் பொய் சொல்லுகின்றான் என்பதைப் புரிந்து கொண்டபோதும், அவனை தொடர்ந்து இன்னலுக்கு உட்படுத்த விரும்பவில்லை.

"சாத். இருட்டாகிக் கொண்டு வருது. வா அதிகாலை சுண்டல் வண்டி வருது. சுண்டல் 'பெக்கற்' ஒன்றை வாங்கிக் கொண்டு. 'பீச்' பக்கம் போய் காற்று வாங்கிக் கொண்டு போவம்"

மூவரும் கடற்கரை வீதியின் ஓரமாக சுண்டலைச் சாப்பிட்டவாறு சவுக்கு மரத்தின் கீழ் போடப்பட்ட மரக் குற்றிகளின் இருக்கைகளில் அமர்ந்தனர்.

சாத்தை ஊடறுத்து சென்ற மோட்டார் சைக்கிளில் இருந்த இரு நபர்களும் சற்று தூரத்தே ஓர் இளைஞனை சுற்றி வட்டமிடுவதைக் கண்டு கொண்டபோதும் புயலுக்குப் பின் அமைதி நிலவுவதைப் போல, கண்டும் காணாமலும் அமைதி பேணினான். கணப்பொழுதில் அந்த இடத்தில் மூவரையும் காணாது சாத் திடுக்கிட்டான். தனக்கு நடந்தது அவனுக்கும் நடந்திருக்கும் என்பதை மனதுக்குள் எண்ணிக்கொண்டு ஒவ்வொரு சுண்டலாக வாய்க்குள் போட்டு அரைத்து விழுங்கினான். செவ்வானத்தின் கீழ்ப் பகுதியில் சில மழைக்குருவிகள் 'கீச். கீச்..கீச்...' - அங்குமிங்கும் பறந்து திரிந்தன. கடற்கலையில் சனக்கூட்டம் மெது மெதுவாக இல்லிடங்களை நோக்கி நகர்ந்தது.



# ரணிலின் தேசியக் கொள்கையும், ஆதரிக்கும் அரசியல் தலைமைகளும் - நடப்பது என்ன?



இலங்கை நாடு தனது இறைமையை விட்டுக் கொடுத்துவிட்டதா அல்லது தனது இறைமையைக் கொன்றிருக்கிறதா என்று யாரிடம் கேட்டாலும் அதற்கு சாதாரண மக்கள் கூட அதற்குப் பதில் சொல்லக்குடிய அளவுக்கு தற்போது இந்த இறைமை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லவேண்டும். இலங்கையில் அரசியல்வாதிகள் செய்கின்ற ஒவ்வொரு செயல்களுக்காகவும் இலங்கை மக்கள் விலைகொடுக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்கள். குறிப்பாக 1956 ஆம் ஆண்டு முதல் அல்லது 1948 ஆம் ஆண்டு சுதந்திரமடைந்ததன் பின்னர் இலங்கை அரச நிர்வாகங்கள் அல்லது இலங்கையின் அரசியல்வாதிகள் செய்த எந்தவொரு வேலைத்திட்டங்களும் நல்வாழ்வுக்கு வழிசமைப்பதாக அமையவில்லை என்பதுதான் உண்மை.

ஆரம்பத்தில் தமிழர். முஸ்லீம்கள். சிங்களவர் அனைவரும் இணைந்தவொரு நாடு என்ற அடிப்படையில் இலங்கை கட்டியெழுப்பப்படவேண்டும் என்பதே அனைவரின் கருத்தாக அமைகின்றது. சாதாரணமாக தமிழர்கள் கூட அந்த விடயத்தில் விட்டுக்கொடுத்ததாகக் கூறப்படுகின்றது. காலனித்துவ ஆட்சியில் கூட அந்த நேரத்தில் பிரித்தானியரிடம் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தால் இலங்கை நாடு வெவ்வேறு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கக்கூடிய வாய்ப்புக்களும் இருக்கின்றன. ஆனாலும் அதனை சிங்களவர்களை விட தமிழர்களே விரும்பவில்லை என்பதாக கூறப்படுகின்றது. சேர்.பொன். அருணாச்சலம். சேர்.பொன்.இராமநாதன் போன்றவர்கள் அதனை விரும்பவில்லை. சிங்களவர்களுடன் இணைந்துதான் ஆட்சியை செய்யவேண்டும் என்பதே அவர்களின் கருத்தாக அமைந்ததாக பழைய வரலாறுகள் கூறுகின்றன. இலங்கையின் சுதந்திரத்திற்கு தமிழர்களும் பாரிய பங்களிப்பினைச் செய்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மையான விடயம். ஏனென்றால் அது சிங்களவர்களால் மதிக்கப்பட்டாலும் அடுத்தடுத்த வருடங்களில் அது மாற்றிக்கொள்ளப்பட்டது.

குறிப்பாக சிங்களவர்கள் அதுவும் அரசியல்வாதிகளைப் பொறுத்த வரையில் ஆரம்பத்தில் இலங்கை ஒரு சமஷ்டி நாடாக இருக்கவேண்டும் என்பது அவர்களின் விருப்பமாக இருந்தாலும் கூட வருகின்ற காலங்களில் அரசியல் மயப்படுத்தப்பட்ட ஒருபோக்கிலே அவர்கள் மாறிக்கொண்டார்கள். குறிப்பாக சமஷ்டிக் கொள்கையை ஆதரிப்பதாகக் கூறிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா பின்னர் சிங்களம் மட்டும் என்ற சட்டத்தை கொண்டுவந்தபோது அவர் அரசியலுக்கு முழுமையாக ஈர்க்கப்பட்டார். அதுவே இன்றையளவிலான இனப்பிரச்சினைக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது. சிங்களம் மட்டும்என்றகொள்கைஇறுதியில்தமிழர்கள் சிங்களம் படிக்க முடியாது. சிங்களவர்களுக்கு மாத்திரம் தான் சகலவற்றிலும் உரிமை. சலுகை என்ற அடிப்படையில் இருந்த அந்த நிலைமையானது இலங்கையின் இனப் பிரச்சினையை அதாவது தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் இருந்த இனப்பிரச்சினையை முழுமையாக வேறூன்றச் செய்தது என்றுதான் கூறப்படுகின்றது. அதற்குப் பின்னர் வந்த ஆட்சியாளர்களும் அதனை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை. தமிழர் தரப்பு தாம் போராடித்தான் சிங்களத் தரப்பிடமிருந்து. சிங்களத் தலைவர்களிடமிருந்து உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் அல்லது சலுகைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் தமிழர் தரப்பு அப்போதிருந்த அதற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தது. அதுதான் உண்மை. சிங்களத் தரப்பும் இதனை சமாளித்ததேயொழிய எப்போதும் இதற்கான தீர்வினைக் காண்போம் என எண்ணியதில்லை. குறிப்பாக தமிழர் போராட்டங்கள் வடக்கில். கிழக்கில் ஆரம்பித்தபோது அதனை ஆரம்பத்திலேயே சரிசெய்துவிடவேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் ஏற்படவில்லை. சிங்களத் தலைமைகளுக்கு ஏற்படவில்லை என்பதுதான் உண்மை.

சிங்கப்பூரின் அப்போதைய பிரதம மந்திரி லீ குவான் யூ இலங்கைக்கு வந்திருந்தார். அப்போது இலங்கையைப் போன்று சிங்கப்பூர் வரவேண்டும் என அவர் விரும்பியதாகக் கூறப்படுகின்றது. இருந்தாலும் அவர் கூறிய கதையொன்று இன்னும் வெளியில் வராமல் இருக்கிறது. அதாவது இலங்கை இந்தப் பிரச்சினைகளை நிவர்த்தித்து சட்டத்தை ஒழுங்காக நடைமுறைப்படுத்துமாவிருந்தால் நிச்சயமாக அடுத்தகட்டத்திற்கு செல்லும் என்ற கருத்தை அவர் தெரிவித்திருந்தார். அவர் வந்த காலகட்டத்தில் இனப்பிரச்சினை தோன்றியிருந்தது. எனவே அந்தக் காலகட்டத்தில் இனப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமாகவிருந்தால் சட்டம் ஒழுங்காக தமது கடமையைச் செய்ய வேண்டும் என்பதே அவர் வலியுறுத்திய விடயம்.

சிங்கப்பூரினைப் பொறுத்த வரையில் ஒரு சட்டம் அமுல்படுத்தப்படுகின்ற தென்றால் அந்தச் சட்டம் தொடர்பான முழு விபரங்களும் முதலில் சேகரிக்கப்பட்டு அதனை நடைமுறைப்படுத்த முடியுமா என்பதை பார்த்துத்தான் நாடாளுமன்றத்தில் அந்த யோசனையை அவர்கள் நிறைவேற்றுவார்கள். அந்த யோசனை நிறைவேற்றப்பட்ட பின்னர் அடுத்த நாளே அந்த சட்டம் அமுலுக்கும் வந்துவிடும். இதுதான் சிங்கப்பூரின் நிலைமை. அதே நிலைமையைத் தான் லீ குவான் யூவும் இலங்கைக்கு அமுல்படுத்தவேண்டும் என்று கூறினார். அதாவது சட்டம் சரியாக இயங்குமாகவிருந்தால் இலங்கையில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இருக்காது என்பதுதான் அவருடைய கருத்தாக இருக்கிறது. இருந்தாலும் அதனைக்கூட சிங்கள அரசியல்வாதிகள். அரசியல் தலைமைகள் சரியாக பயன்படுத்தவில்லை என்பதுதான் இப்போதும் சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டு. எனினும் இதுவரை லீ குவான் யூ கூறிய விடயம் வெளியாகவில்லை. அவர் கூறிய முக்கியமான அறிவுரையினை இலங்கை பின்பற்றவில்லை. இதன் காரணத்தினால் மக்கள் தொடர்ந்தும் துன்பத்திற்குள் தள்ளப்பட்டே உள்ளனர். மறுபக்கத்தில் சிங்கப்பூர் மாற்றுச்சக்தியாக இன்று உயர்ந்திருக்கிறது. அதனை தொட்டுக்கூட பார்க்க முடியாமல் இலங்கையின் நிலைமை வந்திருக்கிறது. இலங்கையில் சட்டங்கள் சரியாக அமுல்படுத்தப்பட்டிருந்தால் இந்த நிலை வந்திருக்காது என்பதுதான் பொதுவான கருத்தாக இருக்கிறது.

பதவிக்கு வருகின்ற இலங்கையின் அரசாங்கங்கள் பிரச்சினைகளைத் தீர்க்காமல் தள்ளிப்போடுகின்ற அரசுகளாகவே இருந்தன. இதற்குக் காரணம் இலங்கையில் தேசியக் கொள்கை என்ற ஒன்று இல்லாமையே. எந்த விடயத்திலும் தேசியக் கொள்கை இல்லை. அரசாங்கங்கள் மாறுகின்றபோது அந்த அரசாங்கத்திற்கு வாய்ப்பாக தேசியக் கொள்கைகள் மாற்றப்படுகின்றனவே தவிர பொதுவான தேசிய கொள்கைகள் இல்லை. இந்த மாற்றங்கள் அனைத்து நாடுகளிலும் இடம்பெறுபவை தான். இந்தியாவை எடுத்துக்கொண்டால் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தபோது ஒரு கொள்கையினைக் கடைபிடிக்கும். பாஜக ஆட்சிக்கு வருகின்றபோது கொள்கைகள் மாற்றப்படும். ஆனால் அடிப்படையிலான கொள்கைகளில் விட்டுக்கொடுப்புக்கள் இருக்கும். நாட்டுக்குரிய கொள்கைகளில் விட்டுக்கொடுப்புக்களைச் செய்து தான் தமது கொள்கைகளை செயற்படுத்துவார்கள். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் அது இல்லை. தேசியக் கொள்கை என்பது வெறுமனே பேச்சுக்காக மாத்திரமே இருப்பது. நடைமுறைப்படுத்தப்படுவது இல்லை.

ஆரம்பத்தில் பண்டார நாயக்காவின் ஆட்சி முடிந்ததன் பின்னர் சிறிமாவின் ஆட்சிக் காலத்தில் சோசலிசக் கொள்கை அமுல் செய்யப்பட்டது. இடதுசாரிக் கொள்கை அமுல் செய்யப்பட்டது. அதன் பின்னர் ஜனாதிபதியாக ஜே.ஆர். ஜெயவர்த்தனா வந்ததன் பிறகு திறந்த பொருளாதாரக் கொள்கையினைக் கொண்டுவந்தார். அதன் பின்னர் வந்த அரசாங்கங்கள் திறந்த கொள்கையினையும் மூடியக் கொள்கையினையும் இணைத்து நாட்டினை அபிவிருத்தி செய்யத் தலைப்பட்டன. குறிப்பாக அதனை கலப்புப் பொருளாதாரம் என்று கூட கூறலாம். அவ்வாறு பயணித்த இலங்கை இன்றுவரை முன்னேற்றம் பெறவில்லை. முன்னேற ஏனைய நாடுகள் விடவில்லை என்றே காரணம் கூறப்படுகின்றது. ஜே.ஆரின் காலத்தின் பின்னர் இலங்கை இறக்குமதிப் பொருளாதாரத்தில் தங்கியிருந்ததால் உள்நாட்டு உற்பத்தியில் அது தமது கவனத்தைச் செலுத்தவில்லை என்று கூறலாம்.

1970ஆம் ஆண்டு காலப்பகுதியின் பின்னர் இலங்கை மற்றும் இந்திய ஊடகங்களையும் ஒப்பிட்டுப்பார்க்கும் போது. இந்திய ஊடகங்களில் விவசாயத் துறைக்கு கொடுக்கப்பட்ட அதீத பிரசாரம் இலங்கையின் ஊடகங்களில் கொடுக்கப்படவில்லை. இலங்கையின் ஊடகங்கள் கேலிக்கைகளை. விநோத நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கிக் கொண்டிருக்கையில். இந்திய வானொலிகள். ஊடகங்கள் பெரும்பாலும் விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுத்து வந்தன. அன்று விவசாயத்திற்கு வழங்கிய முன்னுரிமை தான் இன்று விவசாயத்தில் தன்னிறைவு கொண்ட நாடாக விளங்குகிறது என்பதுதான் அடிப்படைக் காரணமாக இருக்கிறது. இலங்கை இன்னமும் இதனை நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட காலத்திலும் கூட இலங்கைக்கு வாய்ப்பு இருந்தது. அனைவரும் கட்டாயம் வீட்டுத்தோட்டம் செய்யவேண்டும் என்கிற கொள்கை கொண்டுவரப்பட்டிருக்குமாகவிருந்தால் நிச்சயம் இன்று காய்கறிகளின் விலை அதிகரித்திருக்காது என்றும் கூறப்படுகின்றது. அந்தந்த காலகட்டங்களில் இலங்கை சமாளிப்புக்களைச் செய்துவிட்டு அடுத்த கட்டம் நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது. அதனை ஒரு தேசியக் கொள்கையாகக் கொள்வதற்கு யாரும் முன்வரவில்லை. அரசியல்வாதிகளும். அரச அதிகாரிகளும் இதில் அசமந்தப் போக்கினையே கொண்டுள்ளனர். இந்த காரணிகளால் தான் இலங்கை இன்றும் கஸ்டங்களைச் சந்திக்கின்றது.

அரசியல் ரீதியாகப் பார்த்தால் இன்றைய இலங்கையில் கேள்விக்குறியான ஆட்சியே நிலவுகின்றது. அடுத்தகட்டத்தில் யார் ஆட்சியைப் பிடிப்பார். ரணில் விக்கிரமசிங்கவா? அல்லது மஹிந்த ராஜபக்ச தரப்பினரா? சஜித் பிரமேதாசவா? ஜேவிபி தலைவர் அநுரகுமார திசாநாயக்கவா? யார் வந்தாலும் இந்த நாடு இப்போதைக்கு வளர்ச்சியடைந்த நாடாக அல்லது வளர்ச்சி பெறுகின்ற நாடாக வருவதற்கு வெகுகாலம் பிடிக்கும் என்பதுதான் அனைவரின் கருத்தாகவிருக்கிறது. மூளைசாலிகள் இலங்கையில் இருந்து வெளியேறிவிட்டார்கள் தொடர்ந்தும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அங்கு ஒரு பாரிய வெற்றிடம் காணப்படுகின்றது. இலங்கையில் வாழும் மக்கள் கூட நாட்டின் மீது பற்றுக்கொண்டவர்களை விட அரசியல்வாதிகள் மீது பற்றுக் கொண்டவர்களாகத் தான் இருக்கிறார்கள். இதுவே பொதுவான கருத்து.

பொதுஜன பெரமுனவின் அங்கத்தவர்களாக இருக்கின்றவர்கள் அந்தக் கட்சிக்கு விசுவாசிகளாக இருப்பார்கள். அதேபோல ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்கள் அக் கட்சிக்கே ஆதரவாளர்களாக இருப்பார்கள். சஜித் தலைமையிலான அணியினர் அந்தக் கட்சிக்கு ஆதரவாளர்களாக இருப்பார்கள். தேசிய மக்கள் சக்தியினர் அந்தக் கட்சிக்கே ஆதரவாக இருப்பார்கள். அதைவிட நாட்டின் மீது பற்றுகொண்ட மக்கள் இருப்பது என்பது பெரும்பாலும் குறைவு என்றே கூறவேண்டும். இதற்கான காரணம் இலங்கையைப் பொறுத்தவரையில் இனப்பற்று இருக்கிறது. நாட்டுப்பற்று இல்லை என்றுதான் கூறவேண்டும்.

தொடரும்...

இந்திரஜித்

# துரோகியாகச் சித்தரிக்கப்பட்ட சிவராம் மாமனிதரான வரலாறும், எதிரியாகிய அன்ரன் பாலசிங்கமும்





துரோகம் - தியாகம் என்ற இருநிலைப்பட்ட அடையாளத்தின் மீது வரலாறு நிறுத்தியுள்ள மனிதர்களில் ஒருவர் 'தராகி' என்ற தர்மரத்தினம் சிவராம். ஒருபோது விடுதலைப்புலிகளால் துரோகியாகச் சித்தரிக்கப்பட்ட சிவராம், இன்னொருபோது அதேதரப்பினால் தியாகியாகப் பாராட்டப்பட்டார் - கொண்டாடப்பட்டார். இப்பொழுது சிவராமின் அடையாளம் 'மாமனிதர் சிவராம்' என்பதாகும். சிவராமின் மீது நிகழ்த்தப்பட்ட கொலை இந்த அடையாளத்துக்கு மேலும் மதிப்பைக் கூட்டியுள்ளது. வரலாற்றின் விசித்திரம் இது என்பதா அல்லது தமிழ் அரசியலின் நூதனம் இது என்று சொல்வதா என்று தெரியவில்லை. அல்லது அரசியலில் எதிரியுமில்லை, நண்பருமில்லை, எதுவும் நிரந்தரமில்லை, சூழ்நிலைகளே எதையும் தீர்மானிக்கின்றன என்ற எளிய முடிவுக்கு வருவதா?

ஆனால், சிவராமைப் புலிகள் தங்களுடைய எதிர் நிலையாளராகக் கருதியபோது (1990களில்) கொழும்பில் சிங்கள நண்பர்களும் புலிகளை எதிர்த்தவர்களும் தங்களின் நண்பர் என்றார்கள். இவர்களோடு சிவராமும் நெருக்கமாகவே இருந்தார். 2000இல் புலிகளால் உருவாக்கப்பட்ட வலுச்சமநிலை மாற்றங்களை அடுத்து பலரைப்போல சிவராமும் புலிகளோடு நெருங்கத் தொடங்கினார். அதற்குப் பிறகு, அதே கொழும்பு நண்பர்களும் புலிகளை எதிர்த்தவர்களும் சிவராமைச் சந்தேகித்து விலகத் தொடங்கினர். அவர்களுடைய கண்களில் சிவராம் புலிகளின் ஆளாகித் துரோகியானார்.

ஆக ஒரு தரப்பு ஆதரிக்கும்போது மறுதரப்பு எதிர்க்கிறது. மறுதரப்பு ஏற்றுக்கொள்ளும்போது அடுத்த தரப்பு நிராகரிக்கிறது. இப்படி இருநிலைப்பட்ட 'துரோகம் - தியாகம்' என்ற அடையாளத்திற்குள் சிக்குண்ட சிவராமும் அவரைப் போன்றவர்களும் அவிழ்க்கவே முடியாத புதிரின் முடிச்சாகவே இருக்க வேண்டியவர்களாகியுள்ளனர். வரலாறு இவர்களை எப்படி, எங்கே நிறுத்தப்போகிறது என்பது கேள்வியே.

ஈழ விடுதலைப் போராட்டத்திலும் இலங்கையின் ஊடகப் பரப்பிலும் முக்கியமான ஆளுமையாக வெளித்துலங்கியவர் சிவராம். சரியாகச் சொன்னால், ஈழப் போராட்டத்தில் சிவராமுக்குக் கிடைத்த அங்கீகாரத்தை விடவும் அவர் பெற்றுக்கொண்ட மதிப்பும் அடையாளமும் ஊடகப் பரப்பிலே வந்ததுதான். மொழியறிவு, மொழிதலில் உள்ள தனித்துவம், விடயங்களைக் கற்றுக்கொள்ளும் ஆர்வம், அவற்றை முன் வைக்கும் விதமும் துணிவும், தொடர்புகளை உருவாக்குதல், அவற்றைச் சீராகப் பேணுதல், பயணங்களை மேற்கொள்ளுதல், றிஸ்க் எடுத்தல் போன்றவை சிவராமை குறுகிய காலத்தில் மிகஉயர்ந்தஇடத்திற்குக்கொண்டுசென்றன. இவையெல்லாம் ஊடகவியலாளருக்கான பொதுவான அடிப்படைத் தகுதிகளாகும். இலங்கையில் இத்தகைய அடிப்படைகளைக் கொண்டிருக்கும் ஊடகவியலாளர்கள் குறைவென்பதால் சிவராம் போன்றவர்கள் தனித்துத் துலங்கினர்.

அதை விட இன்னொரு பிரதான காரணம், சிவராம், ஈழப் போராட்டத்தில் ஈடுபட்டதரப்புகளையும்அதன்அரசியலையும் நெருக்கமாக அறிந்தவர் என்பதோடு, அந்த நிலப்பரப்பையும் தெரிந்தவர் என்பதாகும். இந்தப் பிராந்தியங்களின் அறிவும் அனுபவமும் சிவராமின் ஊடக வெளிப்பாட்டை வித்தியாசமாக்கிக் காண்பித்தன. இதனால் 1990களின் முற்பகுதியில் தராகியின் இராணுவ ஆய்வுக் கட்டுரைகளுக்கு தனி மதிப்பிருந்தது. அப்பொழுது தராகி, கொழும்பிலிருந்து கொண்டு 'The Island' இல் எழுதினார். இலங்கை இராணுவத்துக்கும் புலிகளுக்கும் உச்ச மோதல்கள் நடந்து கொண்டிருந்த நாட்கள் அவை. யாருக்கு வெற்றி என்று மதிப்பிட முடியாத நிலையில் ஏற்ற இறக்கமாக மாறி மாறிக் களநிலவரம் இருந்தது. சில இடங்களில் புலிகளின் கை ஓங்கும், சில இடங்களில் படைகளின் கை ஓங்கும். சில இடங்களில் புலிகளை எதிர்கொள்ள முடியாமல் படையினர் திணறிக் கொண்டிருந்தனர். புலிகளின் முதுகெலும்பை முறிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் அதை எப்படிச் செய்வது எனப் படைத்தலைமையும் அரசாங்கமும் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்தன. இந்தச் சூடான களநிலவரத்தைப் பற்றி இக்பால் அத்தாஸ், தராகி சிவராம் போன்றவர்கள் போட்டிபோட்டு எழுதிக் கொண்டிருந்தனர்.

இருவருடைய கட்டுரைகளையும் புலிகளும் கூர்ந்து படித்து வந்தனர். படைத்தரப்பும் படித்தது. ஒரு கட்டத்தில் தராகி எழுதினார், "மன்னார் வழியாகப் படைத்தரப்பு யாழ்ப்பாணத்தை நோக்கி நகர்வதற்குத் திட்டமிடுகிறது. இந்த வழியாக நகர்ந்தால் படைகளுக்குப் பல அனுகூலங்கள் உண்டு. மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் வழி என்பது பெரும்பாலும் பெரிய வெளிகளையும் சிறிய பற்றைக் காடுகளையும் சிற்றூர்களையும் கொண்டது. இது மரபு வழி இராணுவத் தாக்குதலுக்கு படையினருக்கு வாய்ப்பாக இருக்கும். இப்படி நகரும் படையினரைத் தடுப்பது புலிகளுக்குச் சவாலாக அமையும். புலிகளுக்கு பெரும் இழப்புகளையும் ஏற்படுத்தும்" என.

இந்தக் கட்டுரை 1994இல் வந்திருந்தது. அப்பொழுது யாழ்ப்பாணத்தில் அரை நிர்வாகக் கட்டமைப்போடு புலிகளிருந்தனர். இதைப் படித்த புலிகளுக்கு, சிவராமின் மீது உச்சக் கோபம் ஏற்பட்டது. "இராணுவத்துக்குப் புத்தி சொல்கிறாரா தராகி?" என்று சீற்றமடைந்தது புலிகளின் தலைமை. புலிகளுக்குப் பகையான புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்ற அடையாளத்தோடிருந்த தராகியை, அரசாங்கத்தோடும் இணைத்துப் பார்க்க முற்பட்டனர் புலிகள். ஆனால், தராகி எழுதியதைப் போலவோ எதிர்பார்த்ததைப் போலவோ அப்பொழுது படையினர் மன்னார் வழியாகத் தாக்குதலைச் செய்யவில்லை. பலாலி, ஆனையிறவு, தீவுப்பகுதி என்ற மும்முனைகளின் வழியாகவே யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டனர். (பிறகு தராகி சொன்னதைப்போலவே, 2007இல் மன்னார் வழியாகவே இந்த நடவடிக்கையைப் படைத்தரப்பு மேற்கொண்டது. அதிலே படைத்தரப்புக்கு வெற்றியும் கிட்டியது). இதனால், 1995 ஒக்டோபரில் புலிகள் யாழ்ப்பாணத்தை இழக்க வேண்டியிருந்தது. தொடர்ந்து புலிகள் கிளிநொச்சியையும் இழந்தனர். இதெல்லாம் புலிகளுக்குப் பின்னடைவாகவே இருந்தன.

இதைத் தாக்குப் பிடிப்பதற்கு அவர்கள் முல்லைத்தீவுப் படைத்தளத்தைத் தாக்கிப் பெரிய வெற்றியைப் பெற்றிருந்தாலும் 1997இல் தொடங்கிய ஜெயசிக்குறு படை நடவடிக்கை புலிகளுக்கு மேலும் நெருக்கடியைக் கொடுத்தது. அடுத்து என்ன நடக்கும் என்று தெரியாத ஒரு நிலை வளர்ந்து கொண்டிருந்தது. இந்த நாட்களில் அத்தாசும் சிவராமும் என்ன எழுதுகிறார்கள் என்று புலிகளின் தளபதிகளே அறிவதற்கு ஆவலாக இருந்தனர். இந்த ஆவலுக்காக பிரபாகரனுக்கு இந்தக் கட்டுரைகள் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கப்பட்டன. இருவருடைய இராணுவ ஆய்வுகளும் புலிகளுக்குப் பல சந்தர்ப்பங்களிலும் எரிச்சலையூட்டியதுண்டு. ஆனாலும் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டிக்கொண்டேயிருந்தன.

ஜெயசிக்குறு படை நடவடிக்கையை ஓயாத அலைகள் நடவடிக்கை மூலம் முறியடித்து, ஆனையிறவுப் படைத்தளத்தையும் கைப்பற்றினர் புலிகள். இது புலிகளுக்குப் பெரிய வெற்றியாக - பெரும் இராணுவச் சாதனையாக அமைந்தது. இதைப் பார்த்துப் பலரும் திகைத்துப்போனார்கள். தராகியும் திகைத்தார். அதற்கு முதல் வாரம்வரை, அதாவது ஆனையிறவுத்தளம் வீழ்ச்சியடைவது வரை இராணுவத்தின் கை ஓங்குகிறது என்று எழுதி வந்தவர், இப்பொழுது படையின் முதுகெலும்பு உடைந்துவிட்டது. புலிகள் தேசிய இராணுவமாக - தமிழர்களின் மரபுப் படையணியாக வளர்ச்சியடைந்து விட்டனர் என்று எழுதினார். என்றாலும் புலிகளைப் பற்றிய, அவர்களுடைய அரசியல் முறைமை பற்றிய தராகியின் எண்ணங்களில் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை. தராகியைப் பற்றிய புலிகளின் குறிப்பேட்டிலும் மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை.

2002ஏப்ரல்10இல்நடந்தபிரபாகரன் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிற்கு சிவராம் சர்வதேச ஊடகவியலாளர்களுடன் இணைந்து கிளிநொச்சிக்கு வந்திருந்தார். அப்படி வந்தவர் கிளிநொச்சியைச் சுற்றிப் பார்த்தார். கிளிநொச்சியைச் சுற்றிப் பார்த்தவருக்கு சில அதிர்ச்சிகள் ஏற்பட்டன. முக்கியமாகப் புலிகளின் 'அறிவு அமுது' புத்தகக் கடையில் அவர் பார்த்த புத்தகங்கள். பெரியார் தொடக்கம், மாக்சிஸ, இடதுசாரியப் புத்தகங்களின் பெருந்தொகை. போதாக்குறைக்குச் ஷோபாசக்தியின் புத்தகங்கள், கோவிந்தன் எழுதிய 'புதியதோர் உலகம்' உள்ள இன்னொரு வகை. அருகில் 'சரிநிகர்', 'தினமுரசு' என புலிகளுக்கு எதிர்நிலையில் நிற்கும் பத்திரிகைகள். இதையெல்லாம் எப்படிப் புலிகள் அனுமதித்தனர்? என்று திகைத்துப் போனார் சிவராம். "புலிகளுக்கு எப்படி ஞானோதயம் ஏற்பட்டது? எப்படி மாறினார்கள்?" என்ற கேள்விகள் எழுந்தன. தான் நினைத்திருக்கும் புலிகள் வேறு, இங்கே நடைமுறையில் உள்ள புலிகள் வேறா? என்ற குழப்பம் ஏற்பட்டது.

இதைப் பற்றி கிளிநொச்சியில் தனக்குத் தெரிந்தவர்களைத் தேடிச் சென்று விசாரித்தார். "கிளிநொச்சியில் மட்டுமல்ல, வன்னி முழுவதிலும் இது போல பத்துப் பன்னிரண்டு கடைகளைப் புலிகள் திறந்திருக்கிறார்கள். இதைவிட கிராமங்களில் உள்ள மாவீரர் படிப்பகங்களிலும் இந்த மாதிரிப் புத்தகங்கள் போடப்பட்டுள்ளன. இதைவிட இந்தப் புத்தகங்களைக் கூடுதலாக வாங்கிப் படிப்பது போராளிகளே" என்று சொல்லப்பட்டது. "இந்தக் கடைக்கு யார் பொறுப்பு?" என்று விசாரித்த தராகி, 'அறிவு அமுது'வுக்குப் பொறுப்பான இளங்கோவை (ரமேஸ்) சந்தித்தார். ரமேஸ், பெரியாரியவாதி. தமிழ்ப் பற்றாளர். இதெல்லாம் சிவராமிற்கு மேலும் வியப்பையளித்தது. தராகிக்கும் பெரியாரில் ஈடுபாடுண்டு. மேலும் தமிழ்மொழியிலும் இலக்கியத்திலும் ஆர்வமிருந்தது. இளங்கோவோடு பேசிய தராகிக்கு மேலும் ஆச்சரியங்கள்.


இதற்குப் பிறகு தராகியின் கட்டுரைகளில் பெரிய மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின. புலிகள் கருத்தியல் ரீதியிலும் புதிய முற்போக்குப் பார்வையைக் கொண்டிருக்கிறார்கள். வெளியே கட்டமைக்கப்பட்டிருக்கும் அபிப்பிராயங்களுக்கு மாறாக நடைமுறையில் பல நல்ல விடயங்களைச் செய்கிறார்கள் பன்மைத்துவ வாசிப்புக்கு இடமளிக்கிறார்கள் என்பதால், பன்மைத்துவத்தை, ஜனநாயகத்தை நோக்கிப் புலிகள் நகருகிறார்கள் என்று நம்பினார் சிவராம். எனவே, இது எதிர்காலத்தில் நல்லதொரு ஜனநாயகச் சூழலைத் திறக்கும் தமிழ்த் தேசியம் இதன் வழியே கட்டமைக்கப்படுவது சிறப்பாக இருக்கும் என்ற எண்ணம் சிவராமிற்கு ஏற்பட்டது.

தொடர்ந்து தராகியின் கட்டுரைகள் புலிகளுக்கு ஆதரவான சாய்வு நிலையைக் கொள்ளத்தொடங்கின. ஒரு கட்டத்தில் தராகி 'The Island' இல் எழுதுவதைக் கைவிட்டார் அல்லது குறைத்துக்கொண்டார் அல்லது தராகியின் கட்டுரைகளை 'The Island' இல் பிரசுரிக்க முடியாத நிலை உருவானது. இந்த வளர்ச்சி ஏற்கனவே தமிழ் நெற் (Tamil Net) இல் தொடங்கியிருந்தது. தமிழ் நெற்றில் தமிழர்களுடைய மெய்நிலையை வெளிப்படுத்தவேண்டும். இதன் மூலமாக சர்வதேச சமூகத்திற்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் அரசின் ஒடுக்குமுறையையும் அறியப்படுத்தலாம் என முயன்றார். கூடவே தமிழ் ஊடகத்துறையை அறிவுபூர்வமாக முன்னெடுத்து, சர்வதேசத் தரத்திற்கு வளர்த்தெடுக்கவேண்டும் எனவும் விரும்பினார். இதெல்லாம் மெல்ல மெல்லத் தராகியைப் பற்றிய புலிகளின் மதிப்பீட்டில் புதிய நிலையை உருவாக்கின. இந்த வளர்ச்சி தராகிக்கும் புலிகளுக்கும் இடையிலான நெருக்கத்தை உண்டாக்கியது. ஒரு கட்டத்தில் புலிகளின் முக்கிய தளபதிகளும் தராகியும் கூடிக் கூழ் குடிக்கிற அளவுக்குச் சென்றது. தராகிக்கும் புலிகளுக்கும் இடையிலான நெருக்கம் கூடி நட்பாக வளர்ந்தபோது, புலிகளில் ஒரு சாராருக்கு தராகியின் ஆலோசனைகள் சரியென்று படத் தொடங்கியது. அது சமாதானப் பேச்சுகள் நடந்துகொண்டிருந்த காலம்.

||ஆம் பக்கம் பார்க்க...

**சுழியோடி**

# சாந்தன்: இரண்டு ஆயுள் தண்டனைகள் இரண்டு பிரேத பரிசோதனைகள்



சாந்தன் இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டவர். பொதுவாக இந்தியா - இலங்கை போன்ற நாடுகளில் ஆயுள் தண்டனை எனப்படுவது விடுமுறை நாட்களைக் கழித்து பார்த்தால் 15 ஆண்டுகள். சிறை, சிறப்பு முகாம் போன்ற இடங்களில் சாந்தன் தடுத்து வைக்கப்பட்டிருந்தது 33 ஆண்டுகள். அப்படிப்பார்த்தால் அவர் இரண்டு ஆயுள் தண்டனைகளை முடித்துவிட்டார். அதற்கு பின்னரும் அவர் தாயகம் திரும்புவதற்கு அனுமதிக்கப்படவில்லை. தமிழகத்தில் உள்ள சட்டச் செயற்பாட்டாளர்கள் தமிழக அரசைக் குற்றஞ்சாட்டுகின்றார்கள்.

இந்த விடயத்தில் தாயகத்தில் உள்ள அரசியல்வாதிகளும் பொறுப்புணர்ந்து செயல்படவில்லை. இந்திய மண்ணில் பாரதூரமான குற்றச் செயல்களுக்காக தண்டிக்கப்பட்டவர்கள், விடுவிக்கப்பட்ட பின் அவர்கள் இந்தியர்களாக இருந்தால் வீட்டுக்கு போகலாம். வெளிநாட்டவர்களாக இருந்தால் நாடு கடத்தப்படுவார்கள். அல்லது இந்தியாவில் அவர்களைப் பொறுப்பேற்கக்கூடிய உறவினர்கள் இருந்தால் அவர்களிடம் போகலாம். சாந்தன் தாயகத்துக்கு வர விரும்பினார். தன் தாயுடன் இறுதிக் காலத்தைக் கழிக்க விரும்பினார். அவரோடு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனையவர்கள் இப்பொழுதும் திருச்சி சிறப்பு முகாமில்தான். தண்டனைக் காலம் முடிந்த பின் விடுதலை செய்யப்பட்ட வெளிநாட்டவர்கள் அவர்களுடைய நாட்டுக்குத் திரும்பும் வரையிலும் அவ்வாறு தடுத்து வைக்கப்படுகின்றார்கள்.

விடுவிக்கப்பட்ட சாந்தன் நாட்டுக்குத் திரும்பினால் இலங்கைச் சட்டங்களின் பிரகாரம் அவருக்கு ஆபத்து ஏற்படுமா என்ற ஒரு பயம் அவருக்காக உழைத்த சட்டச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் காணப்பட்டது. நாட்டிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி, உரிய அமைச்சரிடம் உத்தியோகபூர்வமாக ஒரு பதிலை பெறுவது நல்லது என்றும் அவர்களிற் சிலர் அபிப்பிராயப்பட்டார்கள். ஆனால் அது தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகள் எவையும் வெற்றி பெறவில்லை. தமிழ் அரசியல்வாதிகளில் ஒருவருக்கு அது தொடர்பாக எழுதப்பட்ட மின்னஞ்சலுக்குப் பதில்கிடைக்கவில்லை. சிலஅரசியல்வாதிகள் எங்கே, யாரிடம் அதைக் கேட்க வேண்டுமோ அங்கே கேட்காமல், சாந்தனின் வீட்டுக்கு போய் அவருடைய தாயாரைக் கண்டு படமெடுத்துக் கொண்டார்கள்.

இவ்வாறு சாந்தனை விடுவிப்பதற்கு யாரிடம் கதைக்க வேண்டும்? எங்கே போராட வேண்டும்? என்பது தொடர்பாக தமிழ் அரசியல் சமூகம் தெளிவற்றுக் காணப்பட்டது. அல்லது பொறுப்போடு நடந்து கொள்ளவில்லை. அல்லது மூத்த சட்ட மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளரான ஒருவர் கூறுவது போல அதற்கு வேண்டிய அரசியல் பெருவிருப்பம் (political will) அவர்களிடம் இருக்கவில்லை.

திருச்சி சிறப்பு முகாமானது இதற்கு முன்னிருந்த சிறைகளை விடக் கொடுமையானது என்று அங்கு இருப்பவர்கள் கூறுகிறார்கள். அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த போதைப்பொருள் வியாபாரிகள் சிறப்பு முகாமுக்குள் இருந்தபடியே தமது வியாபாரத்தைத் தொடர்ந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. அதன்பின் முகாமில் கட்டுப்பாடுகள் அதிகரித்தன. அது அரசியல் கைதிகளையும் பாதித்தது. சாந்தனைப் போன்றவர்கள் ஏனைய கைதிகளிடமிருந்து பிரிக்கப்பட்டு தனியறைகளில் வைக்கப்பட்டார்கள். சுற்றிவரக் கண்காணிப்பு. உடற்பயிற்சி செய்ய முடியாது. அவர்கள் தடுத்து வைக்கப்பட்ட அறைகளோடு கழிப்பறைகளும் இணைக்கப் பட்டிருந்தபடியால் வெளியே நடமாடுவதற்கும் வரையறைகள் இருந்தன. சிறைக்குள் சாந்தன் பெருமளவுக்கு ஒரு சன்னியாசி போலாகிவிட்டார் என்று வழக்கறிஞர் ஒருவர் சொன்னார். பெருமளவுக்குத் தனித்திருப்பதாகவும் எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டவர் போல காணப்பட்டதாகவும் அவர் சொன்னார். சிறப்பு முகாமில் அவர் சோறு சாப்பிடாமல் கஞ்சி மட்டும் தருமாறு கேட்பதாகவும் கூறப்பட்டது. சிறப்பு முகாமும் சாந்தனின் உடல் கெடுவதற்கு ஒரு காரணம். முடிவில் அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் ஒரு நிலை வந்தபொழுது மீண்டும் அவரது குடும்பத்தவர்கள் தமிழ்த் தேசிய அரசியற் சமூகத்தை அணுகினார்கள்.

அப்பொழுதும் தமிழ்த் தேசிய அரசியற் சமூகம் அதே மந்தத்தனத்தோடு பொறுப்பின்றி நடந்துகொண்டது. சாந்தனை நாட்டுக்குள் கொண்டு வருவது தொடர்பான முடிவை இலங்கையில் எடுக்க வேண்டியது வெளிவிவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும்தான். சம்பந்தப்பட்ட அமைச்சுக்களோடு மிகவும் பிந்தித்தான், அதாவது அவர் இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு கிட்டத்தட்ட 14 மாதங்களின் பின்னர் அதிலும் குறிப்பாக அவர் இறப்பதற்குச் சில கிழமைகளுக்கு முன்புதான் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த விடயத்தில் ஜனாதிபதியை, வெளி விவகார அமைச்சரை அணுகிய அதே காலப்பகுதியில் சாந்தனின் குடும்பத்தவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அணுகியிருக்கிறார்கள். மற்றொரு யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினராகிய அங்கஜனும் அதில் அக்கறை காட்டியிருக்கிறார். அதாவது சாந்தனின் விடயத்தில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, அதற்கு வெளியே உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சரும் அரசாங்கத்தை அணுகியதன் விளைவாகத்தான் நாடு திரும்புவதில் சாந்தனுக்கு இருந்த தடைகள் அகற்றப்பட்டன.

ஆனால், அப்பொழுது எல்லாமே பிந்திவிட்டது. விமானத்தில் பயணம் செய்ய முடியாத அளவுக்கு சாந்தன் நோயாளியாகிவிட்டார் என்று ராஜீவ் காந்தி மருத்துவமனையின் டீன் ஒரு வழக்கறிஞரிடம் கூறியுள்ளார். முடிவில், சாந்தனின் உயிரற்ற உடலைத்தான் அவருடைய தாய்க்குக் காட்ட முடிந்தது. விடுதலை செய்யப்பட்ட பின்னரும் அவர் ஒரு கைதியாகவே இறந்தார். உயிருடன் இருக்கும் போது அவர் இரண்டு ஆயுள் தண்டனைகளை அனுபவித்தார். உயிர் பிரிந்தபின் அவருடைய உடலை இரண்டு தடவைகள் போஸ்மோர்டம் செய்திருக்கிறார்கள். முதலில் இந்தியாவில் பின்னர் இலங்கையில்.

சாந்தனுக்காக தாயகத்தில் உள்ள தமிழ் அரசியல் சமூகம் பெரிய அளவில் போராடவில்லை. இப்பொழுதும் சிறப்பு முகாம்களில் இருப்பவர்களை விடுதலை செய்வதற்காக யார் போராடுகிறார்கள்? சாந்தனோடு சிறையில் வைக்கப்பட்டிருந்த இந்தியப் பிரஜையாகிய பேரறிவாளனை விடுவிப்பதற்காக அவருடைய தாயார் அற்புதம்மாள் தொடர்ச்சியாகப் போராடினார். ஒரு தாயின் நிகரற்ற போராட்டங்களில் அதுவும் ஒன்று. கிழக்கில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்த அன்னை பூபதியின் போராட்டத்தைப்போல அது முன்னுதாரணமானது. ஈழத் தமிழ் அரசியலில் தாயக களத்துக்கு வெளியே நடந்த ஓர் அன்னையின் மகத்தான போராட்டமாக அற்புதம்மாளின் 32 ஆண்டுகாலப் போராட்டம் காணப்பட்டது.

சாந்தனை விடுவிப்பதற்காக அல்லது நாட்டுக்குள் கொண்டு வருவதற்காக தமிழ் அரசியல் சமூகம் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய போராட்டம் எதையும் முன்னெடுத்திருக்கவில்லை. அது மட்டுமல்ல, சாந்தனை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு என்ன செய்யவேண்டும் என்பதிலும் தமிழ் அரசியல்வாதிகளிடம் பொருத்தமான அணுகுமுறைகள் இருக்கவில்லை. சாந்தனின் குடும்பம் சலிப்படைந்து, களைப்படைந்து, ஒரு விதத்தில் விரக்தியடைந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நோக்கிப் போனது. ஆனால் தமிழ் தேசியக் கட்சிகள் தங்கள் சொந்தக் கட்சிக்குள் பதவிப் போட்டி என்று வரும் பொழுது எப்படியெல்லாம் போராடுகிறார்கள்? கடந்த வாரம் தமிழ்த் தேசிய அரசியலின் இயலாமைகளை நிரூபித்த ஒரு வாரம். முதலாவது சாந்தனின் மரணம். இரண்டாவது தமிழரசுக் கட்சி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டமை. அங்கே அவர்கள் புத்திசாலித்தனமாக நடந்தார்களா இல்லையா என்பது வேறு கதை. கட்சிக்குள் வந்த பிணக்கை கட்சிக்குள்ளேயே தீர்க்க முடியவில்லை என்பது ஒரு பாரதூரமான தோல்வி. அதனைத் தீர்ப்பதற்கு கட்சிக்கு வெளியேயும் சிவில் சமூகங்கள் இல்லை என்பது மற்றொரு தோல்வி. கடந்த 15 ஆண்டு காலத் தோல்விகளுக்கு அந்தக் கட்சி பொறுப்பு என்ற படியால் அது அழியட்டும். அதன் வாக்குகள் தென்னிலங்கைக் கட்சிகளுக்குப் போனால்கூட பரவாயில்லை என்று கருதுமளவுக்கு சில சிவில் சமூகப் பிரதிநிதிகள் காணப்படுகிறார்கள் என்பது அதைவிடத் தோல்வி.



இது ஒரு தேர்தல் ஆண்டு. ஜனாதிபதித் தேர்தலில் தற்போதுள்ள நிலவரங்களின்படி அரச தரப்பு, எதிர்க்கட்சி, ஜேவிபி என்று மூன்று அணிகள் போட்டியிடக்கூடிய வாய்ப்புகள் தெரிகின்றன. தென்னிலங்கையில் படித்த நடுத்தர வர்க்கத்தின் மத்தியில் ஜேவிபி ஆதரவு அலை ஒன்று வீசுகிறது. அது வாக்குகளாக மாறுமா? இல்லையா? அல்லது அதை கண்டு பயந்து ஏனைய வலதுசாரிக் கட்சிகள் தங்களுக்கு இடையே ஐக்கியத்துக்கு போகுமா? இல்லையா? என்பதனை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

மேற்சொன்ன மூன்று தரப்புக்களும் போட்டியிட்டால், சிங்கள மக்களின் வாக்குகள் மூன்றாகப் பிரியும். அப்பொழுது தமிழ்த் தரப்பு ஒரு தீர்மானிக்கும் சக்தியாக மேலெழக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகும். ஆனால் அவ்வாறு அரசியல் களத்தில் துணிந்து புகுந்து விளையாடுவதற்கு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. உள்ளதில் பெரிய கட்சி நீதிமன்றம் ஏறத் தொடங்கிவிட்டது. மற்றொரு கட்சி தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்துவிட்டது. அதாவது துணிந்து புகுந்து விளையாடத் தயாரில்லை. ஒரு பொது வேட்பாளரை நிறுத்தப் போவதாகக் கூறிய குத்து விளக்குக் கூட்டணி அதைக் குறித்து பேசிக் கொண்டிருக்கிறதே தவிர செயல்படுவதாகத் தெரியவில்லை. தமிழரசுக் கட்சி தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்காவிட்டால் குத்துவிளக்குக் கூட்டணி அந்தப் பரிசோதனையில் இறங்குமா?

இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வெல்லப்போகும் கட்சி அல்லது கூட்டு, அடுத்த ஆண்டு அனேகமாக பொது தேர்தலை வைக்கும். தொடர்ந்து மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் போன்றன வைக்கப்படலாம். அதாவது வரும் இரண்டு ஆண்டுகளும் தேர்தல் ஆண்டுகளாக அமையக்கூடிய வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. தமிழ் மக்கள் மத்தியில் இப்பொழுது மக்கள் இயக்கம் எதுவும் இல்லை. இருப்பதெல்லாம் தேர்தல் கேட்கும் கட்சிகள்தான். அடுத்தடுத்து வரும் இரு தேர்தல் ஆண்டுகளை எதிர்கொள்ள தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளிடம் என்ன உபாயம் உண்டு? நிர்ணயகரமான ஒரு காலகட்டத்தில், அரங்கில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடிய தரப்புக்களை இந்தியாவும் அமெரிக்காவும் ஏனைய பேரரசுகளும் அணுகிக் கையாள முற்படும் ஒரு காலகட்டத்தில், அரங்கில் துணிந்து புகுந்து விளையாட வேண்டிய தமிழ்த் தரப்பு என்ன செய்து கொண்டிருக்கிறது?

அரசியலில் துணிந்து புகுந்து விளையாடும் தரப்புகள்தான் ரிஸ்க் எடுக்கும். ரிஸ்க் எடுக்கும் தரப்புகள்தான் கனவுகளை நோக்கி யதார்த்தத்தை வளைக்கும். தலைமை தாங்கும். துணிந்து புகுந்து விளையாடும் தரப்புகள்தான் வரலாற்றை உருவாக்குகின்றன. உட்கட்சிச் சண்டையை நீதிமன்றத்துக்கு கொண்டுபோகும் கட்சிகள் வரலாற்றை உருவாக்குவதில்லை. அதுமட்டுமல்ல தேர்தல் வரும்பொழுது தமிழ்த் திரைப்படங்களில் கடைசி நேரத்தில் விசிலடித்துக் கொண்டு வரும் போலீஸ் போல அறிக்கை விடும் சிவில் சமூகங்களும் வரலாற்றைத் தீர்மானிப்பதில்லை.

**நிலாந்தன்**

# பெண்கள் உரிமைகளும் பாதுகாப்பும்




"மனிதன் பிறக்கும்போதே அவனுடன் சேர்ந்து உரிமைகளும் பிறக்கின்றன" என்று சொன்னால் மிகையாகாது. இது விட்டுக்கொடுக்க முடியாத அவர்களுக்கிடையில் பெறவேண்டிய மற்றும் உரித்தானவையாகும். இவ்வுரிமைகளும் சுதந்திரங்களுமின்றி மனிதனால் வாழமுடியாது எனக் கருதப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் அனைவருக்கும் சமமாகவும் பிரிக்க முடியாததுமான இம்மனித உரிமைகள், வழக்காற்றுச் சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் வழியாக உறுதிப்படுத்தப்படுகின்றன.

இவ்வகையில் பெண்களின் உரிமையினை எடுத்து நோக்குவோமேயானால் மனிதனின் ஆதிகால சமுதாயமானது பெண்களின் தலைமைத்துவத்தையே கொண்டிருந்தது. இதுமட்டுமல்லாது பெண்கள் தெய்வங்களாகவும் போற்றப்பட்டனர். ஆனால், மனித நாகரிகம் வளர்ச்சியடைய வளர்ச்சியடைய பெண்கள் படிப்படியாக ஒதுக்கப்பட்டு வந்தனர். இதனால்தான் பெண்ணியல்வாதிகளின் சிந்தனைகளினாலேயே பெண்களின் உரிமைகள் மீட்டெடுக்கப்படல் வேண்டும் என்ற எண்ணக்கரு மேலோங்கியது எனலாம்.

இந்நிலையில்பெண்களுக்கெதிரான சில வன்முறைகள் தோன்றின. கற்பழிப்பு, பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் தொந்தரவு, பெண்களை இழிவான வியாபாரத்தில் பயன்படுத்தல், பலாத்காரப்படுத்தப்பட்ட விபச்சாரம், தடுப்புக்காவல் மற்றும் யுத்த காலங்களில் கற்பழிப்பு, இனப்பெருக்க உறுப்புகளை சிதைத்தல், சிறுவயது திருமணம், குடும்ப வன்முறைகள், சீதனம் போன்ற இன்னோரன்ன பல விடயங்களில் பெண்கள் பல்வேறு இம்சைகளுக்குள்ளாகின்றனர்.

20ம் நூற்றாண்டில் ஐக்கிய நாடு சபையின் தோற்றத்துடன் மனித உரிமைகள் வளர்ச்சியடையத்தொடங்கின. பெண்கள் உரிமைகள் தொடர்பாக கரிசனை ஏற்படத் தொடங்கியது. UDHR ஆனது பெண்களின் உரிமைகள் தொடர்பாக அத்திவாரமிடக் காரணமாயிற்று. UDHR உறுப்புரை 01இல் "மனித பிறவியினர் சகலரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும், உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் நியாயத்தையும் மனசாட்சியையும் இயற்கையாகப் பெற்றவர்கள். அவர்கள் ஒருவரோடு ஒருவர் சகோதர உணர்வுப்பாங்கில் நடந்துகொள்ள வேண்டும்" என்கிறது.

UDHR உறுப்புரை 02 இல் "இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயமுடைய தேசிய அல்லது சமூகத்தோற்றம் ஆதனம், பிறப்பு அல்லது பிற அந்தஸ்து போன்ற எத்தகைய வேறுபாடுமின்றி இப்பிரகடனத்தில் தரப்பட்டுள்ள எல்லா உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் எல்லோரும் உரித்துடையவராவர்."

UDHR பிரிவு 03 இன் படி "வாழ்வதற்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும் சகலரும் உரித்துடையோராவர்."

UDHR பிரிவு 07 இன் படி "எல்லோரும் சட்டத்தின் முன் சமமானவர்கள். பாரபட்சம் எதுவுமின்றி சட்டத்தின் முன் சமமானவர்கள். பாரபட்சம் எதுவுமின்றி சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கும் உரித்துடையவர்களாவர்." இவைகள் பெண்களின் உரிமைகள் தொடர்பான ஆரம்ப ஆவணங்களாக காணப்படுகின்றன.

ICCPR உறுப்புரை 06 இன் படி "ஆணுக்கும் பெண்ணுக்குமாக சமநிலையான உரிமையினை அரசு நிச்சயப்படுத்த வேண்டும்" என்கிறது.

ICCPR உறுப்புரை 23 இன் படி "குடும்பமானது சமூகத்தினாலும், அரசினாலும் பாதுகாக்கப்பட உரித்துடையது" என ஏற்றுக்கொள்கின்ற அதேவேளை "திருமணத்திலும், திருமண காலத்திலும் மற்றும் அதன் அமைப்பிலும் வாழ்க்கைத்துணைவர்களின் சமமான உரிமைகளை உறுதிப்படுத்த அரசு கடமைப்படுகின்றது" என்கிறது. இங்கு திருமண வயதில் ஆள்சார் சட்டங்களில் வயது வித்தியாசம் காணப்படுகின்றது.

ICESCR உறுப்புரை 03 இல் "பொருளாதார சமூகப் பண்பாட்டு உரிமைகளையும் ஆராய்வதற்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமையினை உறுதிப்படுத்துகின்றது."

ICESCR உறுப்புரை (7) (அ) (i) இற்கமைய "ஆண்களின் ஆளப்படுகின்ற வேலை நிபந்தனைகளிலும் பார்க்க குறைந்தளவான வேலை நிபந்தனைகளுக்கு பெண்கள் உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும்".

ICESCR உறுப்புரை (13) (2) (10) (i) "கல்வி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும்" என்பதை குறிப்பிடுகின்றது.

அந்த அடிப்படையில் 1980களில் தான் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் அழித்தொழிக்கப்படல் வேண்டும் என்ற கரிசனையும் ஏற்பட்டது. இது பெண்களின் உரிமைகள் தொடர்பான பிணக்கும் இரண்டு அம்சங்களின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்பட்டது.

**1.பெண்களுக்கெதிரான ஓரங்கட்டுதல்கள் நிறுத்தப்படுதல் வேண்டும்.**
**2.பெண்களுக்கெதிரான வன்முறைகள் நிறுத்தப்படுதல் வேண்டும்.**

இந்த அடிப்படையில் CEDAW 1981 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. இச்சமவாயமானது எவை பெண்களுக்கெதிரான பாரபட்சங்களாக கொள்ளப்படவேண்டும், அத்தகைய பாரபட்சங்களை அகற்றுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எவை என்று இரு விடயங்களையும் விரிவாக விளங்குவதன் மூலம் அதனை அனேகமாகப் பெண்கள் உரிமைகளுக்கான சர்வதேச சட்டமூலம் என சிறப்பாக விபரிக்கின்றது. இச்சமவாயமானது ஆறு பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது.

பகுதி - Iல் உறுப்புரை 01 முதல் 06 வரை பெண்களுக்கெதிரான பாரபட்சத்தின் வரைவிலக்கணத்தை உள்ளடக்கியுள்ளது.

பகுதி - IIல் உறுப்புரை 07 முதல் 09 வரை அரசியல் மற்றும் பொது வாழ்வில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான அரசுகளின் கடப்பாடுகளையும் உள்ளடக்குகின்றது.

பகுதி - IIIல் உறுப்புரை 10 முதல் 14 வரை கல்வி, தொழில் வாய்ப்பு, உடல் நலம், பொருளாதார, சமூக, கலாசார வாழ்வு போன்ற துறைகளில் பெண்களுக்கு எதிரான பாரபட்சங்கள் அகற்றுவது தொடர்பான முன்னேற்பாடுகளைக் கொண்டுள்ளது. மேலும் இப்பகுதி கிராமிய பெண்களின் விசேட பிரச்சினைகள் தொடர்பாக அரசுகளின் கடப்பாடுகளையும் உள்ளடக்குகின்றது.

பகுதி - IVன் 15ம் 16ம் உறுப்புரைகள் பெண்களின் உரிமைகள் மற்றும் விவாகம், குடும்பவியல் சட்டம் என்பவற்றை செயற்படுத்துகையில் சட்டத்திற்கு முன் ஆண்களுடன் பெண்கள் சமம் என்ற நிலையை அடைந்துகொள்வது தொடர்பான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

வியட்னாமில் 1993ல் நடைபெற்ற மனித உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் உலக மாநாடு பெண்களால் தமது உரிமைகளுக்காக நடத்திய போராட்டம் ஒரு தேசிய மைல்கல் எனலாம். இம்மாநாட்டிற்கு முன்னரும் அது நடந்த வேளையிலும் பெண்கள் முன்னொரு பொழுதும் கண்டிராத விதத்தில் தமது சக்திகளை ஒருங்கிணைத்ததனால் சர்வதேச சமூகம் பின்வருமாறு கூறியுள்ளது.

**"பெண்களினதும் பெண் பிள்ளைகளினதும் மனித உரிமைகள் பாரதீனப்படுத்த முடியாத உள்ளார்ந்த மற்றும் பிரிக்க முடியாத அனைத்துலக மனித உரிமைகளின் ஒரு சக்தியாகும்."**

UN பொதுச்சபைகளினால் 1999 ஆம் ஆண்டு Optinal Protocol to the CEDAW அங்கீகரிக்கப்பட்டு 2000 ஆம் ஆண்டு அமுலாகி வந்தது. இலங்கை 2002 ஆம் ஆண்டு பின்னுறுதிப்படுத்தியது. இதன் கீழான ஏற்பாடுகள் இலங்கை பிரஜைகளுக்கும் ஏற்புடையதாகும்.

சமவாயத்தில் குறிப்பிடப்பட்ட உரிமைகள் அரசதரப்பினால் மீறப்படுகையில் பாதிக்கப்பட்டவர் அல்லது அவர் சார்பில் தனிப்பட்டவர் அல்லது அவர்களின் குழு தனது ஊழலை அவைநருக்கு அறிவிக்கலாம். அத்தகைய அறிவிப்பு எவரேனும் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டவுடன் குறித்த பாதிக்கப்பட்டவரின் சம்மதம் பெறப்படல் வேண்டும் அல்லது அதை நியாயப்படுத்த வேண்டும். அனாமோதய அறிவிப்புக்கள் கருத்தில் கொள்ளப்படாது.

ஆங்கிலேயர் காலத்தில் உருவாக்கப்பட்ட தொழில் சட்டங்கள் பெண்கள் ஆபத்தான தொழில் செய்வதிலிருந்து பாதுகாப்பு வழங்கும் நோக்குடனேயே உருவாக்கப்பட்டிருந்தது. எனினும் இது பெண்கள் பொருளாதார ரீதியில் முன்னேறுவதற்கு ஒரு தடையாக காணப்படுகிறது. இவ்வாறு பெண்களைப் பாதுகாப்பது தொடர்பான சட்டங்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும் நீதிமன்றினூடாக வழக்குத் தொடுதல் மற்றும் தீர்ப்புகளைப் பெறுதல் என்பன குறைந்தனவாகவே காணப்படுகிறது.

**பெண்கள் தொடர்பான தொழிற்சட்டங்கள்**

அரசியலமைப்பில் :

உறுப்புரை (1) (2) பால் ரீதியான பாரபட்சம் காட்டப்பட இயலாது என்பதனூடாக பெண்கள் ஆண்களுக்கு சமமாக தொழில் செய்வதை உறுதிப்படுத்துகின்றது.

1933ம் ஆண்டின் Sex Disqualification Removal (Legal profession) Ordinance ஊடாக பெண்கள் எந்த தொழிலிலும் இணைவதற்கு சட்டரீதியான உரிமைகள் கொண்டுள்ளனர். எனினும் அரசியலமைப்பினூடாக பால் ரீதியாக பாதிக்கப்பட்ட பெண் தொழிலாளி ஒருவருக்கு உயர் நீதிமன்றில் நிவாரணம் பெறுவதில் சில மட்டுப்பாடுகள் காணப்படுகின்றது. குறிப்பாக அரச உத்தியோகத்தர்களால் அடிப்படை உரிமை மீறப்பட்டிருக்குமாயின் அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கமைய உயர்நீதிமன்றில் நிவாரணம் பெறமுடியும். எனினும் தனியாருக்கு எதிராக இவ்வேற்பாட்டின்படி நிவாரணம் பெற முடியாது. மேலும் உறுப்புரை 16(1) இன் பிரகாரம் பழைய சட்டங்களை உயர் நீதிமன்றினால் கேள்விக்குட்படுத்த முடியாது.

மேலும் உறுப்புரை 12 (4) பிரகாரம் பெண்களின் நலனுக்காக உருவாக்கும் சட்டங்களைக் கேள்விக்குட்படுத்த முடியாது. உறுப்புரை 12 (3) இன் பிரகாரம் சட்டம் ஒன்று உருவாக்கப்படும் போது அதில் பாரபட்சம் காணப்படுமானால் பாராளுமன்றினூடாக அதனைக் கேள்விக்குட்படுத்தலாம். அரச துறையில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தொழிலில் எந்தவித பாரபட்சமும் காணப்படுமானால் பாராளுமன்றினூடாக அதனை கேள்விக்குட்படுத்தலாம்.

அரச துறையில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தொழிலில் எந்தவித பாரபட்சமும் காணப்படவில்லை. எனினும் தனியார் துறையில் பெண்களுக்கு சில மட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. அரசியல் அமைப்பு இதற்கு எந்த நிவாரணத்தையும் இதுவரை வழங்கவில்லை.

**ஏனைய சட்டக்கட்டுப்பாடுகள் :**

பெண் தொழிலாளர்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் 3 வகைகளாகக் காணப்படுகின்றன.

01.பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகள்.
02.தொழில் நிபந்தனைகள் மற்றும் சமூக பாதுகாப்புக்கான சட்ட ஏற்பாடுகள்.
03.தொழிலாளர் சுகாதாரம் தொடர்பான சட்ட ஏற்பாடுகள்.

**பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகள்**

1923ம் ஆண்டின் EWYC Ordinance - இது பெண்களை குறிப்பிட்ட சில தொழில்களில் ஈடுபடுத்துவதற்கான மட்டுப்பாடுகளை விதிக்கின்றது.

EX- சுரங்கத் தொழில், இரவு நேரக்கடமை
1937 ஆம் ஆண்டின் Employment of Female in Mines Ordinance - இது பொதுவாக பெண்களை நிலத்திற்குக் கீழே வேலை செய்வதைத் தடுக்கிறது.

Factories Ordinance - 1942 ஆம் ஆண்டு தொழிற்சாலைகளில் பெண்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதைக் கட்டுப்படுத்துகின்றது. Sec 14.2(b) (III)

தொடரும்...

**தொகுப்பாக்கம்**
**எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதிய்யா.**
**அதிபர்.கமு/கமு/அஸ்-ஸூஹறா வித்தியாலயம்.**
B.Ed(Hons.),M.Ed, PGDEM (Merit), LLB final year,
Diploma in journalism (reading)- seusl



# பிராந்திய செய்திகள்



## தொழில் வழிகாட்டுதல் மூலம் மூன்றாம் நிலைக்கல்வியை ஊக்குவித்தல்



கல்வி அமைச்சின் திறன் அபிவிருத்தி செயற்திட்டம் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவினால் க.பொ.த சாதாரண தர பரீட்சையை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு க.பொ.த உயர்தரம் ஆரம்பிக்கும் வரையிலும், உயர்தர பரீட்சையை நிறைவு செய்து பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் காலத்திலும் அவர்களை பாடசாலையில் தக்க வைத்து தொழில் வழிகாட்டல் மூலமாக மூன்றாம் நிலைக்கல்வியை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டு முதலாவது முன்னோடித்திட்டம் தெரிவுசெய்யப்பட்ட கல்லூரிகளில் ஒன்றான கல்முனை மஹ்முத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) சம்பிரதாயபூர்வமாக செவ்வாய்க்கிழமை, 05, மார்ச், 2023 கல்லூரியின் முதல்வர் ஏ.பி.நஸ்மியா சனூஸ் தலைமையில் சேர் ரசீக் பரீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாகத் அலி, கல்முனை வலையக்கல்வி அலுவலகம் சார்பில் ஆசிரிய ஆலோசகர் எம். எம்.சியாம் ஆகியோர் கலந்துகொண்டனர். கல்முனை பிரதேச செயலகத்தின் திறன்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.வை. எம்.றிபாது அவர்களினால் தொழில் வழிகாட்டல் நிகழ்வு தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதி அதிபர், ஆசிரியர்கள், பயிற்சி மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பில் வெளியான அறிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கருத்தியலுக்கு அமைய 2024/2025ஆம் ஆண்டுக்காக முன்மொழியப்பட்ட "ஜனாதிபதி கல்வி புலமைப் பரிசில் திட்டம்" பொருளாதார நெருக்கடியிலுள்ள பாடசாலை மாணவர்களின் கல்வியை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு பெரும் உறுதுணையாக இருக்கும் என கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள கல்விச் சீர்திருத்தங்களை இலக்காகக்கொண்டு புதிதாக 20 வலயக் கல்வி அலுவலங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். ஜனாதிபதி ஊடக மையத்தில் கடந்த (8) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், "2024/2025 ஆம் ஆண்டுக்காக முன்மொழியப்பட்ட "ஜனாதிபதி கல்வி புலமைப் பரிசில்" திட்டம் பொருளாதார சிரமங்களுக்கு உள்ளான பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக முடிப்பதற்கு பெரும் ஆதரவை வழங்கும் என்பதைக் கூறவேண்டும். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

குறிப்பாக, கல்வியில் திறமை காட்டினாலும், கல்வியைத் தொடரும் வாய்ப்பை இழக்க, குடும்ப வருமானம் இன்மை ஒரு காரணமாக இருக்கக் கூடாது. எனவே, நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கும், குழந்தைகளின் கல்வி வாய்ப்புகளைப் பாதுகாப்பதற்கும் எங்கள் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. மேலும், கல்விச் சீர்திருத்தங்களில் சிறப்பு கவனம் செலுத்தியுள்ளோம். பாடசாலையில் தரம் 13இல் நடைபெறும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் காலங்களில் தரம் 12இல் நடத்த எதிர்பார்த்துள்ளோம். மேலும், தற்போது தரம் 11இல் நடத்தப்படும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை தரம் 10 இல் நடத்தவும் எதிர்பார்த்துள்ளோம்.

பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களின் வயதை மேலும் ஒரு வருடத்தினால் குறைப்பதே இதன் நோக்கமாகும். அதன்படி, தொழில் வாய்ப்புகளுக்காக விண்ணப்பிப்பதில் பட்டதாரிகளாக இளம் வயதிலேயே பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறுவதும் அவர்களுக்கு முக்கியமானது என்பதைக் கூறவேண்டும். மேலும், முதலாம் தரத்திற்கு முன்னதாகவே சிறு குழந்தைகளுக்கு (Pre - Grade) வகுப்புகளைத் தொடங்கவும் தயாராக உள்ளோம். இன்று பிறக்கும் குழந்தைகள் எதையும் மிக விரைவாகப் புரிந்து கொள்ளும் திறனைக் கொண்டுள்ளதை அடிப்படையாக வைத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது நாடு முழுவதும் சுமார் 100 வலயக் கல்வி அலுவலகங்கள் உள்ளன. புதிய கல்விச் சீர்திருத்தத்தின் மூலம் கல்வித் துறையை மேலும் வலுப்படுத்தும் வகையில் வலயக் கல்வி அலுவலகங்களின் எண்ணிக்கையை 120 ஆக அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது பாடசாலைக் கல்வியின் தரத்திற்காக எடுக்கப்பட்ட முக்கிய முடிவு என்பதை குறிப்பிட வேண்டும். பாடசாலைக் கல்விக்காக பல பாடசாலைகளை இணைத்து ஒரு கொத்தணிக் கல்வி முறையை அறிமுகப்படுத்த உள்ளோம். புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு ஆசிரியர்கள், அதிபர்களும் நியமிக்கப்பட உள்ளனர். தற்போதுள்ள அதிபர் தர வெற்றிடங்களுக்குத் தேவையான ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளவும் நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்" என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார் மேலும் தெரிவித்தார்.

## ரயில் பயணிகளுக்கான முக்கிய அறிவிப்பு

*கரையோர ரயில் வீதியின் பராமரிப்புப் பணிகள் காரணமாக கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து வெள்ளவத்தை ரயில் நிலையம் வரையான பகுதியில் ஒரு ரயில் வீதிக்கு ரயில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*(09), (10) மற்றும் (11) ஆகிய மூன்று நாட்களுக்கு இது அமுல்படுத்தப்படும்என திணைக்களம் தெரிவித்துள்ளது. கெம்பனித்தெரு வீதி மற்றும் கொள்ளுப்பிட்டி ரயில் நிலையங்களுக்கு இடையிலான பாலம் ஒன்றின் பராமரிப்பு பணிகள் மற்றும் நீர் வழங்கல் சபையின் குழாய் பதிக்கும் பணிகள் காரணமாகவே இவ்வாறு போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக கரையோர வீதியில் ரயில் தாமதம் ஏற்படக்கூடும் என ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.*



## புதிய தீர்மானத்தை வெளியிட்ட நிதியமைச்சு

மாற்று திறன்களைக் கொண்டவர்கள், கண்டறியப்படாத சிறுநீரக நோயாளிகள் மற்றும் முதியோர் உதவி பெறும் நபர்களுக்கான கொடுப்பனவை அஸ்வெசும நலன்புரி முறைமையின் ஊடாக வழங்க நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது. இது தொடர்பான கொடுப்பனவுகள் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, உதவி பெறும் மாற்று திறன்களைக் கொண்ட 410,000 பேருக்கு தலா 7,500 ரூபா மாதாந்த கொடுப்பனவும், சிறுநீரக உதவி பெறும் 50,000 பேருக்கு தலா 7,500 ரூபா கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது.

இது தவிர முதியோர் உதவி பெறும் 820,000 பேருக்கு தலா 3,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இந்த கொடுப்பனவுகள் இந்த வருடம் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 ஆம் திகதி வரை செலுத்தப்படவேண்டும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

## சமுர்த்தி திட்டம் ரத்து செய்யப்படமாட்டாது

சமுர்த்தி திட்டத்தை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ரத்து செய்ய அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். கடந்த (06) பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும், சமுர்த்தி திட்டத்தை மேம்படுத்துவதற்கு விசேட பொறுப்பை எதிர்காலத்திலும் முன்னெடுப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க சுட்டிக்காட்டினார்.

தற்போதுள்ள முறையில் நலன்புரி நன்மைகள் சபைக்கு இந்த கட்டாயப் பங்களிப்பை வழங்க வேண்டிய பணத்தின் வகையை குறைத்து, மீதமுள்ள பணத்தை பயனாளியின் வங்கிக் கணக்கில் நேரடியாக வழங்க இயலாது என ஜனாதிபதி மற்றும் பிரதமரும் ஆலோசனை வழங்கினர்.

எனவே, சமூக வலுவூட்டல் அமைச்சகம் மற்றும் சமுர்த்தி திணைக்களத்திற்கும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம்.

2024 ஜூலை முதல் 20 லட்சம் பயனாளிகளின் எண்ணிக்கையை 24 லட்சமாக உயர்த்தும் நேரத்தில், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் இந்தப் பயனாளிகள் அனைவரும் பங்களிக்கும் முறையைத் தயாரிக்குமாறு கோரியுள்ளோம்.

சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளால் இந்த பங்களிப்பு தொகையை தற்போது பயன்பெறும் வங்கி கணக்கிலிருந்து சமுர்த்தி திட்டத்தில் வரவு வைப்பதற்கு அவர்களின் சம்மதம் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

## "லெஜெண்ட்ஸ் சம்பியன்ஸ் கிண்ணம்-2024" : சம்பியனானது அட்டாளைச்சேனை சோபர்





# சினி துளிகள்



## மாமன்னனைத் தொடர்ந்து மாரி செல்வராஜ் இயக்கும் புதிய படங்கள்



மாரி செல்வராஜ் பரியேறும் பெருமாள், கர்ணன், மாமன்னன் ஆகிய படங்களை இயக்கி வெற்றி பெற்றுள்ளார்.

கடைசியாக அவர் உதயநிதி ஸ்டாலின், வடிவேலுவை வைத்து இயக்கியிருந்த மாமன்னன் திரைப்படம் விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் வெற்றி பெற்றது. இந்தப் படத்தை தொடர்ந்து மாரி செல்வராஜ் துருவ் விக்ரமை வைத்து கபடி விளையாட்டு வீரரின் வாழ்க்கை வரலாறு திரைப்படத்தை இயக்கவுள்ளார். இந்த புதிய படத்தின் படப்பிடிப்பு இம்மாதம் தொடங்க இருக்கிறது.

இந்தப் படத்தை முடித்த கையோடு மாரி செல்வராஜ் அடுத்த ஆண்டு கார்த்தி படத்தை இயக்குகிறார் என செய்திகள் வந்துள்ளன. பிரின்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் இப்படத்தை தயாரிக்க இருப்பதாகவும் படத்திற்கான படப்பிடிப்பு அடுத்த வருடம் தொடங்கும் என கூறப்படுகிறது. துருவ் விக்ரம், கார்த்தி படத்தை முடித்துவிட்டு மாரி செல்வராஜ் தனுஷ் படத்தை இயக்குகிறாராம்.

## சச்சின் பந்துவீச பேட்டிங் செய்த நடிகர் சூர்யா



நடிகர் சூர்யா தற்போது ISPL எனப்படும் இந்தியன் ஸ்ட்ரீட் பிரீமியர் தொடரில் கலந்து கொண்டிருக்கிறார். அதில் அக்ஷய் குமார் உள்ளிட்ட நடிகர்களும், சச்சின், ரெய்னா உள்ளிட்ட கிரிக்கெட் வீரர்களும் கலந்துகொண்டனர். தொடக்க விழாவில் சச்சின் உடன் சேர்ந்து சூர்யா உள்ளிட்டோர் மேடையில் நாட்டு நாட்டு பாடலுக்கு டான்ஸ் ஆடியது இணையத்தில் வைரல் ஆனது. இந்த Friendly மேட்சில் சூர்யாவுக்கு சச்சின் பந்துவீசி இருக்கிறார். அந்த வீடியோ தற்போது ரசிகர்கள் மத்தியில் வைரல் ஆகி வருகிறது.

## சர்ப்ரைஸை உடைத்த ராஷ்மிகா மந்தனா

அல்லுஅர்ஜுன்திரைப்பயணத்தில் மிகப்பெரிய வெற்றி படமாக அமைந்தது புஷ்பா. இப்படத்தை இயக்குனர் சுகுமார் இயக்கி இருந்தார்.

தற்போது இப்படத்தின் இரண்டாம் பாகத்தின் ஷூட்டிங் தீவிரமாக நடக்கிறது. மேலும் இப்படம் ரூபாய் 500 கோடி பட்ஜெட்டில் படம் பிரமாண்டமாக உருவாகி வருவதாக கூறப்படுகிறது.

சமீபத்தில் ஜப்பான் சென்ற ராஷ்மிகா மந்தனா, அங்கு அளித்த பேட்டியில் 'புஷ்பா 2' திரைப்படம் குறித்து பேசியிருக்கிறார்.

அதில் அவர், "புஷ்பா 2 திரைப்படம் மிகவும் மிகப்பெரியதாக இருக்கும். இப்போது படத்தின் ஷூட்டிங் நிறைவு செய்துள்ளது. இந்தியா சென்றதும் புஷ்பா 2 படத்தின் பாடல் காட்சியில் நடிக்கவிருக்கிறேன்". "இப்படத்தில் புஷ்பாவுக்கு மனைவியாக நடிப்பதால் சில பொறுப்புகளை ஏற்க வேண்டியிருக்கிறது. புஷ்பா 2வில் அதிக டிராமா மோதல்களும் இருக்கும்" என்று ராஷ்மிகா மந்தனா கூறியுள்ளார்.

## மனோவை கொண்டாடிய விருந்தினர்கள்



தமிழ் மக்களிடையே மிகப்பிரபலமான நிகழ்ச்சியாகக் கொண்டாடப்படும், சூப்பர் சிங்கர் சீனியர் நிகழ்ச்சியின் 10 வது சீசன் கோலாகலமாகத் துவங்கி நடந்து வருகிறது. இந்த நிகழ்ச்சியில், கடந்த வாரம் பாடகர் மனோவின் 40 வருட திரைப்பயணத்தை கொண்டாடும் வகையில், மனோ ஸ்பெஷல் சுற்று நடத்தப்பட்டது.

இந்தியத் திரையிசையுலகில் 40 வருடங்களைக் கடந்திருக்கும் பாடகர் மனோ, இதுவரையிலும் 35000க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். இந்தியாவின் முன்னணி இசையமைப்பாளர்கள், முன்னணி நட்சத்திரங்கள், முன்னணி பாடகர்கள் என அனைத்து பிரபலமான கலைஞர்களுடன் பணியாற்றியுள்ளார். 3000க்கும் மேற்பட்ட நேரடி மேடை இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார்.

சூப்பர் சிங்கர் நிகழ்ச்சிகளில் நீதிபதியாகவும் கலந்துகொண்டு, பல அறிமுகப் பாடகர்களுக்கு ஊக்கமளித்து வருகிறார். பாடகர் மனோவின் 40 வருட திரை இசைப்பயணத்தைக் கொண்டாடும் வகையில், சூப்பர் சிங்கர் சீனியரில் பாடகர் மனோ சிறப்புச் சுற்று நடைபெற்றது. இதில் சூப்பர் சிங்கர் சீனியர் போட்டியாளர்கள் ஒவ்வொருவரும், மனோவின் பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பாடி அசத்தினர்.

இந்நிகழ்ச்சியில் மனோவை கௌரவிக்கும் விதமாக, அவருக்காகவே இசைத்துறையிலிருந்து இசையமைப்பாளர் சிற்பி, மால்குடி சுபா, உண்ணிமேனன், கல்பனா முதல் பல இசை மேதைகள் கலந்துகொண்டனர். மேலும் ஒரு சிறப்பாக இதுவரை எந்த ஒரு மேடையிலும் அதிகமாகக் கலந்துகொள்ளாத, திரை ஆளுமை மனோவின் நண்பர், நடிகர் திரு.வெண்ணிற ஆடை மூர்த்தி அவர்கள், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மனோவின் பாடல்களைக் கொண்டாடும் விதமாக சூப்பர் சிங்கர் ஜூனியர் முன்னாள், சீசன் 9 மற்றும் 10 போட்டியாளர்கள் இணைந்து, மனோவிற்காக ஒரு சிறப்பு நிகழ்வை அரங்கேற்றினார்கள். இந்நிகழ்வில் மனோவின் குடும்பத்திலிருந்து அவரது மகன், மனைவி உட்பட குடும்பத்தினரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## கடுப்பான காஜல் அகர்வால்

தென்னிந்திய சினிமாவின் முன்னணி நடிகையாக வலம் வருபவர் தான் நடிகை காஜல் அகர்வால்.

இவர் தமிழ், தெலுங்கு, ஹிந்தி போன்ற அனைத்து மொழி படங்களிலும் நடித்துள்ளார்.

திருமணத்திற்கு பின் சினிமாவில் இருந்து விலகி இருந்த காஜல் அகர்வால், தற்போது ஷங்கர் இயக்கத்தில் கமல் ஹாசன் நடிப்பில் உருவாகிவரும் இந்தியன் 2 படத்தில் நடித்து வருகிறார்.

சமீபத்தில் காஜல் அகர்வால் பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டார்.

அப்போது ஒரு நபர், காஜல் அகர்வாலை கட்டிப்பிடித்து போட்டோ



எடுக்க முயன்றார். கடுப்பான காஜல் அங்கு முறைத்த படி நின்றார்.

தற்போது அந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் காட்டுத்தீ போல் வேகமாக பரவி வருகிறது.



# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

36

புலிகளின் நடவடிக்கைகள் ஒரு பக்கமும் படையினரின் படுகொலைத் தாக்குதல்கள் மறுபுறமுமாக இரண்டு தரப்புக்குமிடையில் சிக்கித் திணறினர் மக்கள். ஆனால், இந்த நிலை குறித்து வெளியுலகத்துக்கு எந்தச் செய்தியும் வெளியே செல்ல முடியாதவாறு அரச தரப்பு இறுக்கமான நடவடிக்கைகள் மூலம் பார்த்துக்கொண்டன. படையினரின் தாக்குதல்களில் கொல்லப்படும் மக்கள் பற்றிய உண்மைச் செய்திகளுடன் மேலும் பல பொய்களையும் இணைத்து பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. புலிகளின் ஆட்சி, நிர்வாகக் கட்டமைப்புகள் சகலதும் தகர்ந்து ஆட்டம் கண்டது.

புலிகள் அடிப்படையில் ஒரு இராணுவ அமைப்பு என்பதை நாம் முதலில் புரிந்துகொள்வது அவசியம். இது அவர்கள் பற்றிய விமர்சனம் அல்ல. முழு உண்மை. சகல வளங்களையும் தமது இராணுவ நடவடிக்கைகளுக்கும் வெற்றிக்குமாகவே பயன்படுத்திவரும் இயல்பு புலிகளினுடையது. தமது இராணுவ நடவடிக்கைகளுக்கான ஆதாரத் தளமாகவே அவர்கள் அவற்றைப் பயன்படுத்தினர். பிரபாகரன் எப்போதும் இராணுவ நடவடிக்கைகளிலும் இதற்கான தயார்படுத்தல்களிலும் வளங்களிலுமே கூடிய கவனத்தைச் செலுத்திவந்தார். அவருடைய அணுகுமுறையே அரசியலில் இராணுவ மேலாதிக்கத்துக்கு முன்னுரிமை அளிப்பதாக இருந்தது. அதாவது புலிகளின் இராணுவ பலத்தின் மூலம் எதிரியையும் மக்களையும் வெல்ல முடியும் என்று நம்பிக்கை வைத்திருந்தார். தமது படையணிகளைக் கட்டமைப்பதிலும் தளபதிகளைப் பெருக்குவதிலும் அவர் காட்டிய ஈடுபாட்டுக்கும் முன்னுரிமைக்கும் சமமாக அவர் பிற துறைகளில் எந்த ஆற்றலாளர்களையும் உருவாக்கவில்லை. எனவே எல்லா நிர்வாகத் துறைகளும் துணை அலகுகளும் அவர்களின் போர் நடவடிக்கைகளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் அளிப்பவையாகவே இருந்தன. அப்படியே அவற்றைப் பிரபாகரன் உருவாக்கியிருந்தார்.

எனவே சிதைந்த அந்த நிர்வாகக் கட்டமைப்புகள் சனங்களைப் போரை நோக்கித் திருப்புவதில் மும்முரமாகின. சனங்களோ அதுவரையிலும் நிபந்தனையற்ற முறையில் எல்லா வகையான தவறுகளுக்கும் அப்பால் அளித்துவந்த தமது ஆதரவுத் தளத்தை மாற்றித் 'தப்பினால் போதும்' என்ற கட்டத்துக்கு வந்தனர். எனவே அவர்கள் எப்படியும் வன்னியை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர்.

இதேவேளை புலிகள் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளை போர் முறையை மாற்றி அமைக்க வேண்டும் எனச் சிலர் வலியுறுத்தி வந்தனர். களத்தை மாற்றுங்கள் யுத்திகளை மாற்றுங்கள். என அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தினர். இதில் ஒரு சில புலம்பெயர் தமிழரும் அடங்குவர். இதேவேளை படைத்தரப்பின் தாக்குதல்கள் மேலும் மேலும் மோசமடைந்தன. தினமும் நூற்றுக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டனர். பல நூற்றுக் கணக்கிலானோர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களை மருத்துவ சிகிச்சைக்காக வெளியே கப்பல் மூலம் எடுக்கும் நடவடிக்கையைச் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் ஆரம்பித்தது. இதற்கு முன்னர் புதுக்குடியிருப்பு மருத்துவமனை அங்கே இயங்கியபோது சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் பாதுகாப்பு உத்தரவாதத்துடன் அங்கே நிலைகொண்டிருந்தது. சிறிலங்கா அரசும் விடுதலைப்புலிகளும் ஏற்றுக்கொண்ட விதிகளின் பிரகாரம் செஞ்சிலுவைச் சங்கக் குழு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

ஆனால், ஒரு கட்டத்தில் மருத்துவமனைப் பகுதியை அண்மித்து நின்று விடுதலைப்புலிகள் கனரக ஆயுதம் மூலமாகப் படையினர் மீதும் விமானப் படையின் மீதும் தாக்குதல்களைத் தொடுத்தனர். இதை சிறிலங்கா அரசின் வேவு விமானம் (இது அமெரிக்கத் தயாரிப்பு. ஆளில்லா வேவு விமானம். அமெரிக்கா இந்த விமானத்தை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தது) வட்டமிட்டு நோட்டமிட்டது. (இந்த விமானம் எப்போதும் வானத்தில் பறந்து கொண்டேயிருக்கும்) வேவு விமானத்தின் தரவுகளின் படி புதுக்குடியிருப்பு மருத்துவமனையின் மீது படைத்தரப்பு தாக்குதல் நடத்தி அதைத் தரைமட்டமாக்கியது.

பின்னர் புதுமாத்தளன் பகுதி கடற்கரையிலிருந்த மருத்துவமனையில் சிகிச்சையும் மேலதிக மருத்துவத்துக்காகக் கப்பல் மூலம் திருகோணமலைக்கும் காயமடைந்தவர்களும் நோயாளிகளும் எடுத்துச் செல்லப்பட்டனர். ஒவ்வொரு கப்பலிலும் 400க்கு மேற்பட்டவர்கள் இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டனர். கை கால் இழந்தவர்கள், கண் பறிபோனவர்கள் உறவுகளை இழந்தவர்கள் என்றே இவர்கள் இருந்தனர். தினமும் தெருவிலும், ஆஸ்பத்திரியிலும், தார்ப்பாலின் கூடாரங்களின் மத்தியிலும் சாவடைந்த பிணங்கள் தொகை தொகையாகக் கிடந்தன. மரணம் எல்லோருடனும் குதித்து விளையாடியது. தாம் உயிர் பிழைப்போம் என்று அந்த நாட்களில் எவரும் நம்பியிருக்கவில்லை. சாவு அந்தக் கணம்வரைத் தங்களை நெருங்கவில்லை என்பது மட்டுமே உண்மை. மற்றபடி கொலை வலயத்தினுள்ளேதான் எல்லோரும் இருந்தனர்.

ஒரு சிறு அமைதியோ இடைவெளியோ வராதா. இந்தியாவோ தமிழகமோ ஐ.நாவோ பிற சர்வதேசச் சமூகமோ சிறியதொரு அமைதிச் சூழலை உருவாக்கித் தரமாட்டாதா என்ற ஏக்கம் எல்லோர் மனதிலுமிருந்தது. இதேவேளை புலிகளின் கடுமையான கண்காணிப்பையும் மீறிப் பொதுமக்கள் எப்படியோ வன்னியைவிட்டு வெளியேறிக் கொண்டேயிருந்தனர். ஆனால் அந்தத் தொகை பெரியதல்ல. புதிய புதிய காட்டுவழிகள், கடல்வழிகள், சதுப்பு நிலப் பாதைகளினூடாக மிக உச்சமான அபாயங்களின் மத்தியில் சனங்கள் ஓடி ஒளிந்துகொண்டிருந்தனர்.

மருந்துத் தடை, உணவுப் பொருட் தடை என்பனவும் தீவிரமடைந்தன. சனங்களின் கையில் பணமில்லை, உற்பத்திகளில்லை, வருமானமில்லை, சேமிப்பில்லை. வங்கிகள், பாடசாலைகள் எதுவுமில்லை. தூங்குவதற்கோ சமைப்பதற்கோ குளிப்பதற்கோ அவகாசமில்லாமல் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. சனங்களை இலக்குவைத்து அரச தரப்பு தாக்குதல்களை நடத்தியது. படைத்தரப்பு முன்னேற முன்னேற நிலைமை மோசமடையவே தொடங்கியது. இப்போது பங்கர்களும் பாதுகாப்பற்றவையாகின. வெளியே நடமாட முடியாத அளவுக்கு ஓய்வில்லாத தாக்குதல். பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்ட பகுதிக்குள்ளேயே தாக்குதல்கள். புலிகளும் இந்தப் பகுதிக்குள் இருந்தே தாக்குதல்களைத் தொடுத்தனர்.

இதைப்போன்றே சிறிலங்கா அரசு தரப்பிலும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார, பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாகப் பேசவல்ல அமைச்சர் ரோஹித போகல்லாகம, மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க, சிறிலங்கா பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க உட்படச் சகலரும் முழுப் பொய்களையே சொல்லி வந்தனர். அதிலும் இந்தக் கொடூர யுத்தத்தை போர் விதிமுறைகளை முற்றிலும் மீறிய கொடிய தாக்குதல்களை இவர்கள் மனிதாபிமான நடவடிக்கை என்று அழைத்தனர்.

ஆனால் யாராலும் விளங்கிக் கொள்ள முடியாத விசயமாக இருப்பது புலிகளின் கரும்புலிகள் அணிகள் ஏன் செயற்பட முடியாமல் ஆகின என்பதே. படைத்தரப்பு புலிகளின் ஒவ்வொரு கோட்டையையும் கைப்பற்றி முன்னேறும்போது புலிகளின் உறுப்பினர்களின் மத்தியிலும், சனங்களின் மனதிலும் கரும்புலிகளின் தாக்குதல்கள் நடக்கலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. தவிரவும் பிரபாகரன் இராணுவ ரீதியாக மிகவும் ஆற்றலுள்ளவராக மதிக்கப்பட்டவர். ஆனால், எவருக்கும் தெரியாத, விளங்காத ஒரு புதிராக அவர் அமைதி காத்தபடி பின்வாங்கிக்கொண்டிருந்தார். கண் முன்னே பல ஆயிரக்கணக்கான சனங்கள் செத்து மடிந்துகொண்டிருந்தனர். அப்போதும் அவர் தனது நடவடிக்கையைக் கைவிடவில்லை. முன்னேறும் படையினரைத் தடுக்கும் அதே மாதிரியான ஒரே வகையான தாக்குதலையே தொடர்ந்தார். இந்தத் தடுப்பு நடவடிக்கையை எப்படி எதிர்கொள்வது, எவ்வாறு முறியடிப்பது என்று படைத்தரப்பு மிக நன்றாகப் படித்திருந்தது. அதன்படி அது எல்லா எதிர்ப்புகளையும் மிக லாவகமாகவும் இலகுவாகவும் முறியடித்தது.

மாத்தளன் தொடக்கம் வட்டுவாகல் வரையிலான முன்னூறு மீற்றர் அகலமும் 10 கிலோ மீற்றர் நீளமும் உள்ள கடற்கரையில் ஏறக்குறைய மூன்று லட்சம் மக்கள் செறிந்திருந்தனர். சாப்பாடு, குடிநீர், தங்குமிடம், பாதுகாப்பு, மருத்துவம், கழிப்பறை எனச் சகலத்துக்கும் பிரச்சினை. ஏற்கனவே இந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. இரண்டு கிராம அலுவலர்கள் பிரிவிலுமாக சுமார் முன்னூறு குடும்பங்கள் மட்டுமே வாழ்ந்த இடத்தில் இப்போது மூன்று லட்சத்துக்கும் அதிகமானவர்கள் என்றால் நிலைமை எப்படி இருக்கும்? அதுவும் எந்த அடிப்படை வசதிகளையும் செய்ய முடியாத சூழலில்!

சனங்கள் இந்தப் பகுதியில் தஞ்சமடைந்தபோது படையினர் புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, ஆனந்தபுரம் பகுதிகளில் மட்டும் முற்றுகைச் சமரில் ஈடுபட்டனர். புலிகளின் இறுதி எதிர் நடவடிக்கை இங்கேதான் நடந்தது. இந்த நடவடிக்கையை அவர்கள் மிகத் தீவிரமான முறையில் நடத்தத் திட்டமிட்டிருந்தனர். மக்களுக்கு ஏற்பட்டிருந்த உளச்சோர்வு, பேரவலம் எல்லாவற்றையும் இந்த நடவடிக்கை மூலம் போக்கிவிடலாம் என்று இறுதி நம்பிக்கையோடு புலிகளின் சில மூத்த தலைவர்கள் சொன்னார்கள். இந்தத் தாக்குதலில் அவர்களுடைய மூத்த முன்னணித் தளபதிகள் பலரும் கலந்துகொண்டனர். பிரிகேடியர் தீபன், பிரிகேடியர் ஆதவன், பிரிகேடியர் விதுசா, பிரிகேடியர் துர்க்கா, பிரிகேடியர் மணிவண்ணன், கேணல் சேரலாதன், கேணல் ராகேஸ் உட்படப் பல தளபதிகள் இதன்போதே கொல்லப்பட்டனர். முழு நம்பிக்கையுடன் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் புலிகளின் வரலாற்றிலேயே பெரும் தோல்வியாகவும் மாபெரும் ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் முடிந்தது. இது பிரபாகனை நிலைகுலைய வைத்தது. கொல்லப்பட்ட தளபதிகளின் சடலங்களைக்கூட அவர்களால் எடுக்க முடியவில்லை. ஏற்கனவே இன்னும் பல தளபதிகள் கள முனைகளில் கொல்லப்பட்டிருந்தனர்.

சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி, மாலதி படையணி போன்றவையும் முன்னரே பெருமளவுக்குச் சிதைந்துவிட்டன. சிறிலங்கா அரசு இன்னும் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியது. இப்போது இறுதிக்கட்ட நடவடிக்கைக்குப் படைத்தரப்பு தன்னைத் தயார்படுத்தியது. இறுதிநாட்கள் என்று சொல்லப்படும் ஏப்ரல் 18க்குப் பிந்திய மே 18 வரையிலான நாட்களில் நிலைமை இன்னும் மோசமாகியது. சனங்கள் ஏற்கனவே இரகசிய வழிகளைத் தேடித் தேடி மிகவும் ஆபத்தான வழிகளில் படைத் தரப்பிடம் தப்பிச்செல்ல முற்பட்டனர்.

தொடரும்...



05ஆம் பக்கத் தொடர்ச்சி...

"சமாதானப் பேச்சுகளின் வழியே அமெரிக்கா, புலிகளைத் தோற்கடிக்க முயற்சிக்கிறது. இதற்காக அது நோர்வேயைப் பயன்படுத்துகிறது. இதையே அது பலஸ்தீனத்திலும் செய்தது. புறத்தோற்றத்துக்கு பலஸ்தீனத்தில் பிரச்சினை தீர்க்கப்பட்டதாகவும் யாஸீர் அரபாத் வெற்றியடைந்ததைப் போலவும் தெரியலாம். ஆனால், ஒஸ்லோ உடன்படிக்கையின் மூலம் பலஸ்தீன விடுதலைப் போராட்டம் பலவீனப்படுத்தப்பட்டதே நடந்தது. ஒஸ்லோவின் பொறியில் அரபாத் சிக்கினார். அதைப்போல ஈழப் போராட்டத்தையும் தோற்கடிப்பதற்கு நோர்வே மூலமாக அமெரிக்க - இந்தியக் கூட்டு முயற்சிக்கிறது" என்றார் சிவராம்.

இந்த அபிப்பிராயம் புலிகளின் உள்ளே மெல்ல விவாதத்தை உருவாக்கியது. இதன் விளைவாக உள்ளக சுய நிர்ணய உரிமையைப் பற்றி விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஒரு காலத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு விளங்கப்படுத்தக் கடுமையாகக் கஸ்ரப்பட்டார். மறுபக்கத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தைகளின் போது வெளியக சுயநிர்ணய உரிமை - உள்ளக சுயநிர்ணய உரிமை என்ற இரண்டு வகையான சுயநிர்ணய உரிமைகளைப் பற்றிப் பேசி அரசாங்கத் தரப்புப் பிரதிநிதிகளின் வயிற்றை அந்த நாட்களில் கலங்க வைத்தார் அன்ரன் பாலசிங்கம். இந்த இரண்டு சுயநிர்ணய உரிமைகளைப் பற்றியும் அறிவதற்காக அப்போது தங்களுடைய ஆய்வுகூடங்களில் இரவு பகலாகக் கிடந்து தலையைப் பிய்த்துக் கொண்டிருந்தனர் சிங்கள அரசியல் ஆய்வாளர்களும் சிங்கள அரசியலாளர்களும்.

ஆனால், "இது ஒரு டப்பாக் கதை. இதில் பெரிதாக ஒன்றுமே இல்லை. உள்ளக சுயநிர்ணய உரிமை என்பது தமிழர்களின் அரசியல் அபிலாஷையை ஒரு போதுமே நிறைவேற்றாது. தமிழர்களுடைய போராட்டத்துக்கும் அவர்கள் செய்த தியாகத்துக்கும் இது ஈடாக அமையாது. இது ஒரு வார்த்தை விளையாட்டே தவிர, அரசியல் வடிவம் அல்ல. பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதற்கு மேற்குலகத்தின் ஏற்பாட்டில் நோர்வே முன்வைத்த வடிவம் ஏறக்குறைய இவ்வாறான ஒன்றே. ஆகவே தமிழீழப் போராட்டத்தை முன்னெடுப்போர் இதைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும்" என்று ஒரு குண்டைத் தூக்கிப்போட்டார் தராகி சிவராம்.

அன்ரன் பாலசிங்கத்தின் உள்ளக சுயநிர்ணய உரிமை என்ற பரிந்துரையை தராகி கடுமையாக விமர்சித்தார். சிவராம் செல்வாக்குச் செலுத்திய தமிழ் நெற்றிலும் இந்தத் தொனி வெளிப்பட்டது. இந்த விடயம் தொடர்பான விவாதங்கள் மெல்லச் சூடு பிடிக்கத் தொடங்கின. ஒரு கட்டத்தில் சிவராமின் வாதங்கள் புலிகளிடத்தில் செல்வாக்குப் பெறத் தொடங்கின. ஆயிரக்கணக்கான போராளிகளையும் பொது மக்களையும் இழந்து நடத்திய போராட்டத்துக்கு சின்னஞ்சிறியதொரு அதிகாரப் பகிர்வா கிடைக்கப் போகிறது என்று குழம்பிப்போனார்கள் புலிகளின் தளபதிகளில் பலரும். இதைப்பற்றி புகழ்மிக்க தளபதியாக இருந்த கேணல் பால்ராஜ் பகிரங்கமாகவே ஒரு பொது மேடையில் பேசினார். "நாங்கள் தமிழீழத்தை அடைவதற்காகவே போராடிக் கொண்டிருக்கிறோம். அந்தக்கனவோடுதான் ஆயிரக்கணக்கான போராளிகள் மாவீரர்கள் ஆனார்கள். (மாவீரர்கள் என்பது களத்தில் போராடிச் சாவடைவது). இப்போது உள்ளக சுயநிர்ணயம், வெளியக சுயநிர்ணயம் என்று ஏதோவெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்த விளங்காத விசயத்துக்காக நாங்கள் போராடவில்லை. எங்களைப் பொறுத்தவரை - களத்தில் நிற்கும் போராளிகளைப் பொறுத்தவரை தமிழீழம்தான் ஒரே முடிவு. அதுதான் தீர்வு" என்றார் பால்ராஜ்.

தராகி சிவராமுக்கு இது மிகப் பெரிய வாய்ப்பாக இருந்தது. ஏறக்குறைய இந்த வாய்ப்பின் மூலமாகப் பாலசிங்கத்தைப் பின்னுக்குத் தள்ளித் தோற்கடித்தார். இதற்குப் பிறகு அன்ரன் பாலசிங்கம் பேச்சுவார்த்தைகளில் பங்கெடுப்பது இல்லாமற் போனது. அதற்கு கூறப்பட்ட காரணம் அவருடைய உடல்நிலை சரியில்லை என்பது. அதில் பாதி உண்மை இருந்ததும் உண்டு. ஆனால், அதையும் விட பாலசிங்கம் மனரீதியாகக் களைப்படைந்து விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டார் எனலாம். பின்னாட்களில் அவர் கவலைகளையே அதிகமாகக் கொண்டிருந்தார்.

நிலைமைகளும் நிகழ்ச்சிகளும் எதிர்மறையாகிக் கொண்டிருந்தன. ஆனால், அதுவரையிலும் புலிகளுக்கு வெகு தொலைவிலிருந்த சிவராம் இந்த ஒரு விளக்கத்தோடு மிகக் கிட்டவாக வந்தார். பின்னர், புலிகளின் மிக முக்கியமான தளபதிகளும் பொறுப்பாளர்களும் சிவராமின் பெயரை அடிக்கடி உச்சரிக்கத் தொடங்கினர். சிலர் சிவராமுடன் உறவுகளைப் பலப்படுத்தினார்கள். சிவராம் அடிக்கடி வன்னிக்குப் பயணித்துத் திரும்பினார். ஆனால், பாலசிங்கம் தெரிவித்திருந்த, "ஒரு மக்கள் சமூகத்திற்கு அதன் உள்ளக சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டு, அரசாட்சியிலிருந்து ஒதுக்கப்பட்டு, அடக்குமுறைகளுக்கு ஆளாகப்பட்டால், அம்மக்களுக்கு வெளியக சுயநிர்ணய உரிமைக்கு, அதாவது பிரிந்துசென்று அரசியல் சுதந்திரத்தை நிலைநாட்டும் உரிமைக்கு உரித்துண்டு. உள்ளக சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டு, அரச அடக்குமுறைக்கு ஆளாகும் மக்கள் வெளியக சுயநிர்ணய உரிமைக்கு உரித்தானவர்கள்" என்ற கருத்தைப் பலரும் கவனத்திற் கொள்ளத் தவறினார்கள்.

இது புலிகளின் தரப்பில் சமாதானப் பேச்சுகளில் தலைமை வகித்துக் கொண்டிருந்த அன்ரன் பாலசிங்கத்துக்கு நெருக்கடியை உண்டாக்கியது. புலிகளிடையே இரண்டு அபிப்பிராயங்கள் மேலெழுந்தன. ஒரு தரப்பு அன்ரன் பாலசிங்கத்தை ஆதரித்தது. மறு தரப்பு தராகி சொல்வதையிட்டு யோசித்தது. இதனால் அவர்கள் மேலும் தராகியை நெருங்கினர். இதைப் பயன்படுத்தி புலிகளுக்குள் நுழையத் தொடங்கினார் தராகி.

இந்த வளர்ச்சியானது, ஒரு காலம் புலிகளின் எதிர்ப்பட்டியலில் இருந்த தராகியை இடம்மாற்றி நட்புச் சக்தியாக நெருக்கமாக்கியது. மறுவளத்தில் அரசு தராகியின் பெயரை எதிர்ப்பட்டியலில் ஏற்றியது. வன்னியில் புதிய ஞானோதயம் பெற்றுவிட்டார் தராகி என்று சிங்கள விமர்சகர்கள் குறிப்பிடுமளவுக்கு நிலைமைகள் மாறின. விளைவாக 28 ஏப்ரல் 2005 முன்னிரவில் கொழும்பிலே வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார் சிவராம். கொழும்பில் துரோகி என்ற மதிப்பீட்டில் கொல்லப்பட்ட தராகியை வன்னியில் - கிளிநொச்சியில் புலிகள் மாமனிதர் என மதிப்பளித்தனர்.

துரோகிப் பட்டியலில் இருந்தவர் தியாகியானார். நட்புப் பட்டியலில் இருந்தவர் எதிரியானார். வரலாறு இப்படி எத்தனை சுவாரசியங்களைத் தன்னுடைய மடியில் ஏந்தி வைத்திருக்கிறது! இப்போது புலிகளும் இல்லை, பாலசிங்கமும் இல்லை, பிரபாகரனும் இல்லை, சிவராமும் இல்லை. ஆனால், உள்ளக சுயநிர்ணயம், வெளியக சுயநிர்ணயம் என்ற கருத்து நிலையும் இது தொடர்பான வாதப்பிரதிவாதங்களும் மட்டும் மிஞ்சியுள்ளன. இந்த இரண்டு நிலைப்பாட்டையும் இரண்டு தரப்புகள் தங்களுடைய அரசியல் நிலைப்பாடுகளாகக் கொண்டிருக்கின்றன.

# நெடுந்தீவின் வரலாற்று தொன்மையும் சுற்றுலாத்துறையும்

கடந்தவாரத் தொடர்ச்சி...

இவை மட்டும் அன்றி, மக்களுக்கு இடையே பல நூறு வருடங்களுக்கு முன்பிருந்தே குடும்ப உறவுகள், "நிலைத்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சமய ரீதியாகவும் நெடுந்தீவு மக்கள் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம், புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலயம், அனலைதீவு ஐயனார் ஆலயம், வேலணை அம்மன் ஆலயம் ஆகியவற்றின் உற்சவங்களிலும் பெருந்தொகையாகக் கலந்துகொள்வர். இவ்வாறாகப் பண்டைக்காலத்தில் வந்து குடியேறிய மக்களே நெடுந்தீவின் பரம்பரை மக்களாவர்.

**வரலாற்றுச் சின்னங்களும், அடையாளங்களும்**

வெடியரசன் கோட்டை, பெரியதுறை, மாவிலித்துறைமுகம், போர்த்துக்கீசர் கோட்டை, ஒல்லாந்தர் கோட்டை, குதிரைகள் குதிரை லாயங்கள், குவிந்தா, பூதம் வெட்டிய கிணறுகள், 40 அடி மனிதனின் காலடி, பழமை வாய்ந்த ஆலமரம், அரசனை அரசு, பெருக்கு மரம், மணல் கடற்கரை, வெல்லைக் கடற்கரை, புறாக்கூடு, கல்வேலி, வளரும் கல் போன்றன காணப்படுகின்றது.

**நெடுந்தீவின் பிரதான துறைமுகங்களும் வரலாற்றுச் சின்னங்களும்**

நெடுந்தீவின் துறைமுகங்கள்

**பெரியதுறை**

நெடுந்தீவிலிருந்து மக்கள் பண்டைக் காலத்தில் வேறு இடங்களுக்குப் பிரயாணம் செய்துள்ளார்கள். தென் இந்தியாவிலுள்ள நாகபட்டினம், இராமேஸ்வரம் போன்ற இடங்களுக்கு மக்கள் சென்று பொருட்களைப் பண்டமாற்றுச் செய்து தமக்குத் தேவையான பொருட்களை வாங்கி வருவது வழக்கமாய் இருந்திருக்கிறது. அக்காலத்தில் மக்கள் பட்டினம் போய் வருவதாகக் கூறுவது இந்தியாவிலுள்ள நாகபட்டினம் போய் வருவதையே குறிக்கும். இதற்காகப் பாவிக்கப்பட்ட துறைமுகம் பெரியதுறை என அழைக்கப்பட்டது.

இங்கிருந்து மக்கள் பாய் வள்ளங்களிலும், வத்தைகளிலும் யாழ்ப்பாணக் கிட்டங்கிக்கும், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய தீவுகளுக்கும் பிரயாணஞ் செய்தனர். வெளி நாடுகளிலிருந்து போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் பாய்க்கப்பல்கள் மூலம் பொருட்களை இத்துறை மூலமே இறக்கினர். இவற்றை விட வேறு சிறிய துறைகளுமிருந்திருக்கின்றன. அவையாவன: கிழக்கே கிழக்குத்துறை, வடக்காக தாளைத்துறை, குடவிலித்துறை, தெற்காக குவிந்தாத்துறை, வெல்லைத்துறை என்பனவாகும். எனினும் பெரிய துறை என்ற பெயரைக்கொண்ட இத்துறையே மிகவும் பெரிய துறையாக அக்காலத்தில் விளங்கியது என்பதனை அறியமுடிகின்றது. இத்துறை நெடுந்தீவின் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ளது. மன்னராட்சிக் காலங்களிலும் இத்துறைமுகமே வழக்கிலிருந்திருக்கிறது. ஒல்லாந்தராட்சிக் காலத்தில் எவரும் இத்துறையிலிருந்து இந்தியாவிற்குச் செல்லாதபடி தடை விதிக்கப்பட்டிருந்ததாக அறியக்கிடக்கின்றது. இத் துறைமுகத்தை யண்டியே வெடியரசனுக்கும் மீகாமனுக்கும் சண்டை நடந்ததாக வரலாறு கூறுகின்றது.

**மாவிலித்துறைமுகம்**

மாவிலித்துறைமுகத்திற்கு மாவிலி என்ற பெயர் வந்ததற்குப் பல கதைகள் கூறப்படுகின்றன. மாவிலி என்ற பெயர் வரக்காரணம் தென் இந்திய அரசன் மாவல்லவன், இத்தீவை ஆண்டதாகவும் அதனால் மாவல்லபுர மக்கள் இத்துறைமுகத்தை மாவிலி என அழைத்ததாகவும் ஒரு கர்ணபரம்பரைக் கதையுண்டு. இதற்கான சரித்திரச் சான்றுகளில்லை.

ஒல்லாந்தர் நெடுந்தீவை ஆட்சி செய்த காலத்தில் இத்துறைமுகம் மூலமாகவே குதிரைகளை இறக்கி ஏற்றினார்கள். மா என்ற சொல்லுக்கு குதிரை, பெரிய என்ற அர்த்தங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆகவே குதிரைகள் ஏற்றி, இறக்கியதனாலேயே மாவிலி என்ற பெயர் உண்டாயிற்று என்பதே உண்மையான காரணமாகும். இத்துறைமுகமே இன்று நெடுந்தீவு மக்கள் ஏனைய தீவுகளுக்கும், யாழ்ப்பாணக்குடா நாட்டிற்கும் கடல் மூலம் பிரயாணஞ் செய்யப் பயன்படும் பிரதான துறைமுகமாகவும் விளங்குகின்றது. இது ஏறக்குறைய 300 அடி நீளமும் 75 அடி அகலமும் கொண்டுள்ளதாகக் காணப்படுகிறது. பிரயாணிகள் இறங்கவும், பொருட்களை இறக்கவும் கொங்கிறீற்றினால் கட்டப்பட்ட துறை ஒன்று உள்ளது. இது கடலினுள் 15 அடி நீளமும், 10 அடி அகலமுமாகக் கட்டப்பட்டுள்ளது. முற்காலத்தில் வத்தைகள் மூலமும், பாய்வள்ளங்கள் மூலமும் பிரயாணம் செய்த மக்கள் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதி தொடக்கம் இன்றுவரை இயந்திரப் படகுகள் மூலமும் இயந்திரமிணைக்கப்பட்ட வள்ளங்கள் மூலமும் குறுகிய நேரத்திலும் வசதியாகவும் இத்துறைமுகத்திலிருந்து பிரயாணஞ் செய்கின்றார்கள். இதற்காகச் சில்வஸ்பிறே, இராசேஸ்வரி, குமுதினி, வடதாரகை, எலாரா எனப் பல இயந்திரப் படகுகள் காலத்திற்குக் காலம் சேவையிலீடுபடுத்தப்பட்டன. இவற்றுடன் பல தனியார் வள்ளங்களும், இயந்திரப் படகுகளும், வத்தைகளும் சேவைகளில் ஈடுபட்டு வருகின்றன. மாவிலித்துறையுடன் பேரூந்து செல்லும், பிரதான வீதி இணைக்கப் பட்டுள்ளது.

**வெடியரசன் கோட்டை**

2000 ஆண்டு பழமையான பெருங்கற்கால மையம் இதுவாகும் என்பதற்காக ஆதாரமாக அங்கு கண்டெடுக்கப்பட்ட கறுப்புசிவப்பு மட்பாண்டம் சிறந்த எடுத்துக்காட்டாகும் நெடுந்தீவின் மேற்கே கோட்டைக்காடு என்னும் பகுதியில் அமைந்திருந்தது. இங்கிருந்தே வெடியரசன் என்னும் மன்னன் தனது ஆட்சியைச் செலுத்தினான். இக்கோட்டை சோழர் காலக் கட்டிட முறைப்படியே கட்டப்பட்டிருந்தது. இதன் வடிவமைப்பு பல சித்திர வேலைப்பாடுகளைக் கொண்டிருந்திருக்கலாமென அதன் சிதைந்த பகுதிகளைக் கொண்டு புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இன்று இக்கோட்டை அழிந்த நிலையிலுள்ளது. இக்கோட்டையை அண்மித்துள்ள பகுதிகளில் மட்பாண்ட ஓடுகள், கூரை ஓடுகள், வட்டமான நாணயங்கள், சதுரமான நாணயங்கள் என்பனவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**போர்த்துக்கீசர் கோட்டை**

போர்த்துக்கீசரும் நெடுந்தீவின் கேந்திர முக்கியத்துவத்தை உணர்ந்து நெடுந்தீவின் மேற்கே பெரியதுறை என்னும் துறைமுகத்திற்கண்மையில் ஒரு கோட்டையைக் கட்டி அங்கிருந்து ஆட்சி செய்தனர். இக்கோட்டை இடிந்த நிலையில் மண்மேடாகக் காட்சியளிக்கிறது. இக்கோட்டை பற்றி பாசெற் என்னும் பாதிரியார், இது ஒரு இரண்டு மாடிக் கட்டிடமாகக் கட்டப்பட்டிருந்தது. இதன் சுவர்கள் மிகவும் அகலமாகவிருந்தன. மேலே இரண்டு அறைகளும், கீழே இரண்டு அறைகளுமிருந்தன. இவற்றுக்குக் கீழே ஒரு சுரங்க அறையிருந்தது.

தொடரும்...

தொகுப்பு - Kanthasamy Kirikaran

# பசுமை எனும் பேரபாயம்

கடந்தவாரத் தொடர்ச்சி...

உதாரணமாக, சிலுவைப் போருக்குப் பிறகு ஐரோப்பாவில் வாசனைத் திரவியங்களுக்கான தேவை அதிகரித்ததால், தென்மேற்கு கடற்பகுதியில் உள்ள காடுகளில் செழிப்பாக வளர்ந்த கறுவா, ஏற்றுமதி வர்த்தகத்தில் ஒரு முக்கிய பொருளாக மாறியது. வர்த்தகத்தின் முக்கியத்துவத்தின் ஒரு குறிப்பிடத்தக்க விளைவு வெளிநாட்டு வர்த்தகமும் பணப் பயன்பாட்டின் அதிகரிப்புமாகும். வெளிநாட்டு வர்த்தகம் முக்கியத்துவம் பெற்றதால், அரேபியர்கள் கடலோரப் பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் குடியேறினர்.

1505இல் போர்த்துகேயர்கள் தற்செயலாக இலங்கையின் மேற்கு கடற்கரையை அடைந்தனர். விரைவில் அவர்கள் கறுவா உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இலங்கையின் திறனை உணர்ந்தனர். அவர்களின் முக்கிய ஆர்வம் பிராந்தியத்தை வெற்றி கொள்வதல்ல, மாறாக வணிகத்தின் கட்டுப்பாடும் ஏகபோகமுமே. குறிப்பாக கறுவா வர்த்தகத்தை முழுமையாகக் கைப்பற்ற முயன்றனர். இது ஏற்றுமதியை பெருமளவில் கட்டுப்படுத்திய அராபிய வர்த்தகர்களுடனான மோதலைத் தூண்டியது. ஆனால் அவர்களின் கடல்வழி ஆற்றல் மற்றும் அவர்களின் தொழில்நுட்ப மேன்மை காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தில் போர்த்துகீசிய தலையீடு மற்றும் அரசியல் பங்கேற்பு ஆகியன நிரந்தர அம்சங்களாகின. இந்தச் செல்வாக்கு தென்னிலங்கையில் மட்டுமன்றி யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் பரவியது. இதற்கு முத்துக்குளித்தல் முக்கிய காரணமாகும்.

டச்சுக்காரரின் வருகையை அடுத்து 1722 இல் தோட்டப் பயிராக கோப்பி அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் உற்பத்தி, ஆரம்பத்தில் மிகவும் குறைவாகவே இருந்தது. கறுவாவின் முதல் தோட்டங்கள் 1769 இல் நிறுவப்பட்டன. 1771 வாக்கில் அவை பொருளாதார ரீதியாக வேலை செய்வதாகத் தோன்றியது. இதன் விளைவாக கரையோரத்தில் ஏனைய தோட்டங்கள் நிறுவப்பட்டன. 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட கறுவாவின் உலகளாவிய விநியோகம் தொடங்கியது. கோப்பி, மிளகு மற்றும் ஏலக்காய் ஆகியவை மக்களின் முக்கிய வருமானம் தரும் பயிர்களாக மாறின. டச்சு ஆட்சியின் ஆரம்ப கட்டத்தில், இயற்கை விவசாயம் மற்றும் நெற்பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அந்த நோக்கத்திற்காக நீர்ப்பாசன முறையின் மறுசீரமைப்பு அவசியமாக இருந்தது. ஆனால் இந்த முயற்சிகள் தோல்வியடைந்தன. இதனால் அரிசியை அதிக அளவில் இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. ஏற்றுமதிக்கான பொருட்களை விரைவாக போக்குவரத்துச் செய்வதற்காக ஒல்லாந்தர் கால்வாய்களை அமைத்தார்கள். உண்மையில் கால்வாய் கட்டுமானத்தில் டச்சுக்காரர்களின் கணிசமான சாதனை நீர்ப்பாசனத்தில் அவர்களின் பணியை முற்றிலுமாக மறைத்தது. மேலும் இந்த கால்வாய்கள் தீவின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளில் ஒன்றாகும். ஆனால் இவை ஏற்படுத்திய சூழலியல் பாதிப்பு பெரிது.

1850 - 1870 இற்கு இடையில் ஐரோப்பாவில் கோப்பிக்கான கேள்வி அதிகரித்தது. இதற்காக இலங்கையில் கோப்பிப் பயிர்ச்செய்கை அதிகரித்தது. காடுகள் அழிக்கப்பட்டு, தரிசு நிலங்கள் பதப்படுத்தப்பட்டு எல்லா இடங்களிலும் கோப்பி பயிரிடப்பட்டது. இந்த 'கோப்பி வெறி' திடீரென முடிவுக்கு வந்தது. ஒரு பூஞ்சையின் காரணமாக முழு உற்பத்தியும் சரிந்தது. ஏக்கர் கணக்கில் நோயுற்ற கோப்பி மரங்கள், காடுகள் அழிக்கப்பட்ட மலைகள், பண்டைய விவசாயத்தில் இருந்து திசை திருப்பப்பட்ட விவசாயிகள் ஆகியன எஞ்சின. இவை ஏற்படுத்திய சூழலியல் தாக்கம் மிகப்பெரியது.

1881 இல் கோப்பிக்கு பதிலாக தேயிலை அறிமுகப்படுத்தப்பட்டது. தேயிலைக்கு அதிக உழைப்பும் மூலதனமும் தேவைப்பட்டது. தேயிலையை உயரமான பகுதிகளில் பயிரிட வேண்டி இருந்தது. மிகவிரைவில் முந்தைய சேனைப் பயிர்ச்செய்கைப் பகுதிகள் தேயிலைத் தோட்டங்களாக மாற்றப்பட்டன. தோட்டப் பகுதிகள் உயரமான பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டன. மேலும் நீண்ட காலமாக தீண்டப்படாமல் இருந்த காடுகள் தோட்ட நிலங்களாக மாற்றப்பட்டன. தேயிலைச் செடியின் தட்பவெப்பத் தேவைகள் காரணமாக தென்மேற்கு சமவெளி மற்றும் மத்திய மலைப்பகுதிகளில் தேயிலை பயிரிடப்பட்டது.

இக்காலப் பகுதியில் தென்னைப் பயிர்ச் செய்கையும் பரவலானது. தென்னந்தோப்புகள் சிறு உடமையாளர்களின் உள்ளூர் நிறுவனங்களாகவே இருந்தன. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இறப்பர் அறிமுகப்படுத்தப்பட்டது. இறப்பர் உற்பத்திக்கு கோப்பி அல்லது தேயிலை பயிரிடப்பட்ட நிலங்களை விட உயரம் குறைந்த நிலங்களே தேவைப்பட்டன. அந்நிலங்கள் தென்னை பயிர் செய்யும் நிலங்களை விட உயரமானவையாகவும் இருக்க வேண்டியிருந்தது.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இலங்கையின் நிலப்பரப்பின் பொதுவான அம்சங்கள் முற்றிலும் மாறிவிட்டன. கடல் மட்டத்தில் இருந்து 300 மீட்டர் வரையிலும் தென்னந்தோப்புகளும், 800 மீட்டர் வரையிலான பகுதிகளில் இறப்பரும் பயிரிடப்பட்டன. தேயிலை 300 மீட்டர் முதல் 2200 மீட்டர் வரையிலான உயரத்தைக் கொண்ட பகுதிகளில் பயிரிடப்பட்டன. மலை உச்சிகளும் மலைப் பகுதிகளும் வனத் தோட்டங்களாக மாற்றப்பட்டன. இது மரம் மற்றும் எரிபொருள் தேவையை ஈடுசெய்யும் பொருட்டு 1890இல் தொடங்கப்பட்டது. அதற்காக வேகமாக வளரும் மரங்களான யூகலிப்டஸ், பைன்ஸ் மற்றும் அகாசியாஸ் போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டன. மொத்தத்தில் மலைநாட்டின் சூழலியலும் உயிர்ப் பல்வகைமையும் காவுகொடுக்கப்பட்டது.

மத்திய மலைநாட்டின் இயற்கையான வனப்பரப்பு விரைவாகவும் என்றென்றைக்குமானதாகக் குறைந்தது. இது காலநிலையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. மழை குறைந்து ஓடைகள் வறண்டுவிட்டன. மலைக்காடுகளில் முன்னர் காணப்பட்ட யானைகளின் பெரிய கூட்டங்கள் படுகொலை செய்யப்பட்டு காணாமல் போயின. பல காட்டுத் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் விரைவான இழப்பு தொடர்ந்தது. பாரம்பரிய விவசாயம் புறக்கணிக்கப்பட்டு, அரிசியை அதிக அளவில் இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. மலைப்பகுதிகளில் இருந்த பெரிய நிலப்பகுதிகள், மேல் மண்ணை இழக்கத் தொடங்கின. இதனால் வளமற்றவையாகி, தீயால் நிர்வகிக்கப்படும் புல் நிலங்களாக மாறத் தொடங்கின. கொலனித்துவ காலத்தின் முடிவில் நிலச் சீரழிவுகளின் படிப்பினைகள் கற்றுக்கொள்ளப்பட்டன. மேலும் நிலப்பரப்புகள், சுற்றுச்சூழல் ஸ்திரத்தன்மையின் சில கூறுகளையாவது தக்க வைத்துக்கொள்ள முடிந்தது. ஆனால் அழிக்கப்பட்ட உயிர்ப்பல்வகைமையை மீட்டெடுக்க முடியவில்லை.

குறிப்பாக தேயிலைப் பயிர்ச்செய்கையால் பாதிக்கப்பட்டது இலங்கையின் மழைக்காடுகளே. 1881இல் இலங்கையில் தேயிலை அறிமுகப்படுத்தப்பட்ட போது 84 வீதமான பகுதி அடர் காடுகளாக இருந்தது. 20 ஆண்டுகளில் இது 70 வீதமாகக் குறைவடைந்தது. இக்காலப்பகுதியில் அழிக்கப்பட்ட காடுகளில் பெரும்பான்மையானவை மழைக்காடுகளே.

இலங்கையில் மழைக்காடுகளின் வாழ்விட இழப்பு இந்நாட்டின் பல்வேறு தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு ஆழமான தாக்கங்களை ஏற்படுத்துகிறது. அதன் தனித்துவமான புவியியல் இருப்பிடம் மற்றும் வளமான பல்லுயிர்த்தன்மையுடன், இலங்கையின் மழைக்காடுகள் 3,000 இற்கும் மேற்பட்ட பூக்கும் தாவரங்களுக்கு தாயகமாக உள்ளன. ஏராளமான உள்ளூர் மற்றும் அழிந்துவரும் உயிரினங்களின் வாழ்விடமாக இவை உள்ளன. ஆபத்தான காடழிப்பு இந்த விலைமதிப்பற்ற உயிரினங்களுக்கும் அவற்றின் நுட்பமான சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கும் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன. ஆபத்தில் உள்ள உயிரினமாகக் கருதப்படும் 'இலங்கை சிறுத்தை', பரவலாக மழைக்காடுகள் அழிக்கப்படுவதால் ஏற்படும் வாழ்விட இழப்பு காரணமாக பாதிப்புக்குள்ளாகிறது. அதேபோல ஊதா நிற முகம் கொண்ட லாங்கூர், பாதிக்கப்படக்கூடிய மற்றொரு உயிரினம். இவை இரண்டும் இலங்கையின் மழைக்காடுகளில் பிரத்தியேகமாக காணப்படுகின்றன. மழைக்காடுகளின் அழிவு பிரித்தானியக் கொலனியாதிக்க காலத்திலேயே தொடங்கியது.

இலங்கையின் சூழலியல் வரலாறு சில முக்கியமான செய்திகளை எமக்குச் சொல்கிறது. பண்டைய இலங்கையின் வாழ்வியலானது இயற்கையோடு இயைந்ததாக இருந்தது. அது விவசாயத்தை மையமாகக் கொண்டிருந்தது. மிகை உற்பத்தியோ அதீத பேராசையோ அற்றதாக இருந்தது. இயற்கையின் மீது கரிசனையுடையதாக இருந்தது. பேண்தகைமை விவசாயத்தினதும் வாழ்வியலினதும் மையமாக இருந்தது. கொலனியாதிக்கத்தின் வருகை இலங்கையின் இயற்கையில் மட்டுமன்றி உற்பத்தி உறவுகளிலும் பாரிய தாக்கத்தை உண்டுபண்ணியது. இது இயற்கையின் மீதான கவனத்திலும் பார்க்க பொருளாதார நலன் சார் அபிவிருத்தியிலேயே கவனம் குவித்தது.

பிரித்தானியக் கொலனியாதிக்கச் செயற்பாடுகள் 'அபிவிருத்தி' என்ற சட்டகத்துக்குள் முன்னேற்றமாகக் கருதப்பட்டன. அவை சீரழித்த இயற்கை பற்றியோ அல்லது உயிர்ப் பல்வகைமையின் இழப்பு பற்றியோ எதுவித கவனமும் கொள்ளப்படவில்லை. இது ஆச்சரியமானதல்ல. ஏனெனில் கொலனியாதிக்கச் சிந்தனைகள் இவ்வாறுதான் மூன்றாமுலக நாடுகளின் வளர்ச்சியை அடையாளங் காண்கின்றன. இலங்கையும் இதற்கு விதிவிலக்காகவில்லை. துன்பம் யாதெனில் கொலனியாதிக்க காலத்தில் இழந்த இயற்கையையும் உயிர்ப் பல்வகைமையையும் மீட்கப் போதுமான நடவடிக்கைகள் கொலனியாதிக்கத்துக்குப் பிந்தைய இலங்கை எடுக்கவில்லை. இலங்கைக்கு கிடைத்த சுதந்திரம் நாட்டின் இயற்கைக்கோ சூழலியலுக்கு கிடைத்த சுதந்திரமாக இருக்கவில்லை.

**மீநிலங்கோ தெய்வேந்திரன்**

---

02ஆம் பக்கத் தொடர்ச்சி...

இந்துத்துவாவைப் பொறுத்தளவில் பௌத்தத்தை தன்னுடைய அங்கமாகவே கருதுகின்றது. அது, ஒருபோதும் தென் இலங்கையின் பௌத்த அடிப்படை வாதத்துக்கு எதிராக இயங்காது. மாறாக, தமிழ் மக்களிடையே மதப் பிளவுகளை ஏற்படுத்தி அதில் குளிர்காய நினைக்கின்றது. அவ்வாறான நிலை உருவானால்தான், தமிழ்த் தேசிய அரசியலை சின்னாபின்னமாக்க முடியும் என்கிற எதிர்பார்ப்பு உள்ளது. தமிழ்த் தேசிய அரசியல் என்பது மத, சாதிய அரசியலைத் தாண்டி நிலைபெற்ற ஒன்று. மத அடையாளங்களை முன்னிறுத்தி, தமிழ்த் தேசியம் நிலைபெறவில்லை.

சைவ மக்களும் கிறிஸ்தவ மக்களும் ஒற்றாக நின்றே தமிழ்த் தேசியம் என்ற அரசியலை கட்டியெழுப்பினார்கள். அங்கு மதங்களைக் கடந்து தமிழர்கள், தமிழர் பாரம்பரிய நிலப்பகுதி என்ற விடயம் முதன்மை பெற்றது. ஆனால், இந்துத்துவாவோ அதனை குறிவைத்து தாக்குகின்றது. அதன்மூலம், தமிழ்த் தேசியத்தை அழித்து, தன்னுடைய அரசியல் இலக்கை பிராந்தியத்தில் தக்கவைப்பதற்கான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது.

இந்துத்துவா எப்போதுமே பௌத்த அடிப்படைவாதம் மாதிரியான கட்டமைப்பைக் கொண்டது. ஆதிக்க ஆக்கிரமிப்புத்தான் அதன் ஒழுங்கு. அப்படிப்பட்ட நிலையில், அதனை நோக்கி தயவு தாட்சண்யங்கள் இன்றி கேள்வி எழுப்பும் எதையும் அழித்தொழிக்கவே செய்யும். இதுதான், இந்துத்துவாக்கு தமிழ்த் தேசியம் மாபெரும் பிரச்சினை. அதனால்தான், தமிழ்த் தேசியத்தை அடியோடு அழிக்க இந்துத்துவா சக்திகளும் முனைகின்றன. அதனை உணர்ந்துகொண்டு செயற்பட வேண்டிய பொறுப்பு, தமிழ் மக்களுக்கு உண்டு.

ஏற்கெனவே, தமிழர் தரப்பில் பலரை இந்துத்துவா சக்திகள் விலைக்கு வாங்கிவிட்டன. அவை, பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிரான எந்தக் குரலையும் எழுப்புவதில்லை. மாறாக, சிறுபான்மை மதங்களுக்கு எதிராகவே பொங்கி பூரிக்கின்றன. வெடுக்குநாறி மலை ஆதிசிவன் அழிப்பு தொடங்கி எந்தவொரு தமிழ் தொன்ம வழிபாட்டிடங்கள் அழிப்பு தொடர்பில் இந்தச் சக்திகள் கேள்வி எழுப்பாது உறங்கிவிடும். இவைக்கு அவர்களின் எஜமானர்கள் என்னத்தை சொல்கிறார்களோ அதைச் செய்வதுதான் வேலை. அப்படியான நிலையில், தமிழ் மக்கள் தங்களின் பாரம்பரிய அடையாங்களையும், உரிமைகளையும் பேண வேண்டுமாயின் தென் இலங்கை பௌத்த அடிப்படைவாத சக்திகளுக்கு எதிராக மாத்திரமல்ல, உள்ளிருக்கும் புல்லுருவிக் கூட்டத்துக்கு எதிராகவும் கவனமாக இருக்க வேண்டும். அதுதான், எதிர்காலத்துக்கான எங்களின் இருப்பை தக்கவைக்க உதவும்.

# சகோதரப் படுகொலையே தமிழீழக் கனவை சிதைத்தது

**ஈ.பி.டி.பி கட்சியின் தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தினப்புயலுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்**



கடந்தவாரத் தொடர்ச்சி...

**கேள்வி : போராட்டங்கள் வென்றிருக்கிறது. தோல்வியடைந்திருக்கிறது?**

**பதில் :-** இல்லை இல்லை. போராட்டங்கள் வென்றிருக்கிறது தோல்வியடைந்திருக்கிறது என்றாலும் எங்களால் தான் நாங்கள் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை உணர. அதை ஏற்றுக்கொள்ளத் தவறுவோமாகவிருந்தால் தொடர்ந்தும் நாங்கள் பிரச்சினைகளைத் தான் எதிர்கொள்ளவேண்டிவரும். மத்தியில் கூட்டாட்சி. மாநிலத்தில் சுயாட்சி. இதனை அடைவதற்கான வேலைத்திட்டம் எங்களிடம் இருக்கிறது. மற்றையவர்களிடம் கொள்கை ஒன்று. வேலைத்திட்டம் வேறொன்று. அதுபோல எம்மிடம் ஒன்றுமில்லை. இதனை அடைவதற்கான வேலைத்திட்டம் என்னவென்றால் தேசிய நீரோட்டத்தில் கலந்துகொள்வது.

இரண்டாவது நாடாளுமன்ற ஜனநாயகம். மூன்றாவது தேசிய நல்லிணக்கம். இதற்கு ஊடாகத்தான் எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்பதை முன்வைத்து நாங்கள் அன்றிலிருந்து இன்றுவரை அதனை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறோம். 1994 ஆம் ஆண்டு தேர்தல் அறிவிக்கப்படுகின்றது. தேர்தலுக்கு ஊடாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. தேர்தலில் போட்டிபோட்டால் துரோகிகளாகக் கருதப்பட்டு அவர்கள் கொல்லப்படுவார்கள் சுட்டுச் சரிக்கப்படுவார்கள் என்று பிரபாகரன் கூறினார் அதனைச் செய்தார். நான் அதனை எல்லாம் பொருட்படுத்தவில்லை. பிரபாகரன் யார் எனக்குக் கூறுவதற்கு?

பின்னர் 2004 ஆம் ஆண்டுத் தேர்தல். 1994 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரை பத்து வருடங்கள். நாடாளுமன்றத்திற்கு ஊடாக ஈ.பி.டி.பி ஏதேதோவெல்லாம் செய்கிறது. மக்களை தங்களிடம் இருந்து பிரிக்கப்போகிறது என்று நினைத்த பிரபாகரன். கள்ள வாக்களிப்பின் மூலமாக 22 நபர்களை பாராளுமன்றம் அனுப்பினார். அந்தந்த நேரங்களில் நாங்களும் ஆசனங்கள் எடுத்திருக்கிறோம். இவர் மக்களை உசுப்பேற்றி என்னையும் வரவிடாமல் செய்வதற்கு முயன்றார். ஆனால் முடியவில்லை. நான் வந்துவிட்டேன். 1994 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டுவரையான பத்து வருடங்களுக்குள் நடந்த இடப்பெயர்வுகள். அழிவுகள். துன்பங்களுக்கு யார் காரணம். பிரபாகரன் மேல் இருந்த பயமும் சுயலாப அரசியலும் தான் எங்களைத் தவிர. ஏனையவர்களை பிரபாகரனுடன் பயணிக்க வைத்தது. இலங்கை அரசால் சுட்டுக்கொல்லப்பட்ட சக இயக்கப் போராளிகளை விட பிரபாகரனால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் போராளிகள் தான் அதிகம். தமிழ் மக்கள் அதிகம். வரலாறு இருக்கிறது.

**கேள்வி : ஈ.பி.டி.பி கொலைகளைச் செய்யவில்லையா?**

**பதில் :** ஏன் இதற்குள் ஈ.பி.டி.பியை இழுக்கிறீர்கள். ஏன் பொய்யான செய்திகளைக் கூறுகிறீர்கள். பயம் சுயலாப அரசியல் தான் காரணம். இவ்விரு காரணிகளும் தான் பிரபாகரன் பக்கம் அவர்களை இழுத்தது. பிரபாகரன் கட்டிவிட்டுப்போன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் இன்று சின்னாபின்னமாகியுள்ளது.

**கேள்வி : டட்லி தொடக்கம் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரை எந்த ஒரு அரசும் தமிழ்த் தரப்பினை ஒன்றிணைந்து செயற்பட விடவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எப் இல் கூட பிளவுகள் ஏற்படுத்தப்பட்டதே?**

**பதில் :** அது இயலாமை. நான் ஏற்கனவே கூறியதைப்போல, இந்திய அரசாக இருக்கலாம், இலங்கை அரசாக இருக்கலாம் அவர்கள் தங்களின் நலனில் இருந்துகொண்டு தான் பிரச்சினைகளைப் பார்ப்பார்கள். நாங்கள் தான் அதனைப் புரிந்துகொண்டு எங்களை அதற்குள் பொறுத்திக்கொள்ளவேண்டும். இதனைத் தான் நான் அன்றிலிருந்து இன்றுவரை கூறிவருகின்றேன். அவர்கள் அதனைத் தான் செய்வார்கள்.

**கேள்வி : விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய இந்திய அரசு பின்னர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக போராட்டம் செய்தது ஏன்?**

**பதில் :** இந்தியா எங்களுக்கு ஆயுதம் வழங்கியது தனிநாட்டினைப் பெறுவதற்கு அல்ல. எங்களின் மூலமாக இலங்கை அரசுக்கு அழுத்தத்தைக் கொடுத்து இலங்கை அரசாங்கத்தை தங்களிடம் பணியவைப்பது தான் அதன் நோக்கம். இதனை நாங்கள் புரிந்துகொள்ளவில்லை என்றால். இதனை பிரபாகரன் புரிந்துகொண்டுதான் தனியாக ஆயுதங்கள் எடுக்கச் சென்றவர். ஆனால் இது தவறாக முடிந்துவிட்டது. அவர்கள் தங்களின் நலனில் தான் அக்கறையாக இருப்பார்கள். நாங்கள் தான் எங்களது நலன்களை முன்னிறுத்தவேண்டும். ஆனால் நாங்கள் அதற்கு எதிர்மாறாக நடந்திருக்கிறோம். 1994 ஆம் ஆண்டு பிரபாகரனின் முழு ஆதரவுடன் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு நாடாளுமன்றம் வந்தது.

**கேள்வி : விடுதலைப் புலிகளுக்கும் அரச பிரதிநிதிகளுக்கும் இடையில் உள்ளூர். சர்வதேச பேச்சுக்கள் இடம்பெற்றன. இதில் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள். அரசுடன் இணைந்து பயணித்த ஈ.பி.டி.பி கட்சியாகிய நீங்கள் ஓரங்கட்டப்பட்டீர்களே?**

**பதில் :** பேச்சுவார்த்தைகள் அனைத்தும் நடந்ததுதான். சந்திரிக்கா ஜனாதிபதியாக வந்தபோது எங்களை அப்புறப்படுத்த முனைந்தார். ஆனால் அவரால் முடியவில்லை. பின்னர் ஆட்சி மாறுகின்றபோது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரபாகரனது கோரிக்கை ஈ.பி.டி.பியை இதற்குள் எடுக்கக்கூடாது என்பதுதான். ஆனால் அதனை அவர்களால் தடுக்க முடியவில்லை. காரணம் நாங்கள் அதனை சரியாகக் கையாண்டதால் அவர்களால் எங்களைத் தடுக்க முடியவில்லை.

**கேள்வி : விடுதலைப் புலிகளுக்கு அங்கீகாரம் இல்லாமலா இந்த நாட்டில் சர்வதேச நாடுகளில் பேச்சுவார்த்தைகள் நடந்தன. இராணுவ உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடந்தன. இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட்டது..?**

**பதில் :** நான் உங்களிடம் கேட்பது என்னவெனில். எனக்கும் மற்றைய கட்சிகளுக்குமிடையிலான வேறுபாடுகள். முதலில் தேசியத்தைப் பற்றி கூறினேன். நல்ல கொலஸ்ரோலுக்கும். கெட்ட கொலஸ்ரோலுக்கும் இடையிலான வேறுபாடுகள் குறித்துக் கூறினேன். என்னுடைய தந்தை ஒரு தொழிற்சங்கவாதி. அவர் எனக்கு 10 ரூபாய் சம்பள உயர்வு தேவையென்றால் 20 ரூபாவை முன்வைத்துப் போராடவேண்டும். பேச்சுவார்த்தையில் 07. 08 ரூபாய் வந்தால் போராட்டத்தைக் கைவிட்டு அதனை ஏற்றுக்கொண்டு. இன்னொரு கட்டத்தில் எஞ்சிய கோரிக்கைகளில் புதிய கோரிக்கைகளை முன்வைத்துப் போராடவேண்டும் என்று கூறுவார். ஆனால் இங்கு எங்களுக்கு 10 ரூபா தேவைப்பட்டது. நாங்கள் 20 ரூபாவினை முன்வைத்தோம். பேச்சுவார்த்தைக்கு வந்தவுடன் 100 ரூபாய் தந்தால் தான் கைவிடுவோம் எனக் கூறினோம்.

திம்புவினை நினைவு வைத்திருப் போம். ஈரோஸ். ஈ.பி.ஆர்.எல்.எப். ரெலோ. புளொட். தமிழர் விடுதலைக் கூட்டணி அமர் மற்றும் சிவா. இந்தப் பேச்சுவார்த்தையில் உண்மையில் அந்த நேரத்தில் இந்தப் பேச்சுவார்த்தையில் எங்களுக்கு நம்பிக்கையிருக்கவில்லை. பேச்சுவார்த்தைக்கூடாக பிரச்சினை களைத் தீர்க்க விரும்பமும் இருக்கவில்லை. நாங்கள் திம்பு கோரிக்கை என்று நான்கினை முன்வைத்தோம். அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துக்கும் சிவசிதம்பரத்திற்கும் கூறினார்கள் நீங்கள் இதில் கையெழுத்துப் போடவேண்டும். கையெழுத்துப்போட முடியாதுவிட்டால் அங்கு வரமுடியாது என்று. வற்புறுத்தித்தான் கையெழுத்துப்போட்டனர்.

அந்த நேரத்தில் திம்பு கோரிக்கை எவ்வாறு உருவாகியது. பேச்சுவார்த்தையை உடைக்கவேண்டும். பேச்சுவார்த்தையை உடைக்கவேண்டுமென்றால். இலங்கை அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ள முடியாததை முன்வைத்தால் தான் உடைக்கலாம். இரண்டாவது அது தமிழ் மக்களுடைய உச்சபட்ச கோஷமாகவும். கோரிக்கையாகவும் இருக்கட்டும் என்றுதான் நாங்கள் அதனை வைத்தோம். அந்த நேரத்தில் பேச்சுவார்த்தையின் ஊடாக இணக்கமோ அல்லது பிரச்சினைகளைத் தீர்க்க விருப்பமோ ஒருவருக்கும் இருக்கவில்லை. இதுதான் இந்த வரலாறு.

1994 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிடுகின்றபோது நாங்கள் என்ன கோஷத்தை. கோரிக்கையை முன்வைத்தோமோ அதுதான் எங்களுடைய வேலைத்திட்டம். தேசிய நீரோட்டத்துக்குள் கலந்துகொள்வதன் ஊடாக நாடாளுமன்ற ஜனநாயகம். தேசிய நல்லிணக்கம். இவற்றிற்கூடாகத்தான் பிரச்சினைகளைத் தீர்க்கலாம். நாங்கள் எங்களுடைய கோரிக்கையையும் இலக்கினையும் வைத்திருக்கிறோம். அதற்குரிய வேலைத்திட்டத்தையும் முன்வைத்திருக்கிறோம். எந்தக் கட்சி கொள்கையுடன் வேலைத்திட்டத்தை முன்வைத்திருக்கின்றார்கள்.

தமிழ்க் கட்சிகள் அல்லது இயக்கங்கள் என்மேல் இருந்த அரசியல் பயத்துக்கு நான் இன்னொரு உதாரணத்தைக் கூறுகிறேன். இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட 1987 -1989 ஆம் ஆண்டு. வடக்கு கிழக்கில் தேர்தலை நடாத்தியாகவேண்டும். தீக்ஷித் மற்றும் வைத்தியர் ஜெய்சங்கர். இன்று வெளிவிவகார அமைச்சராக இருக்கின்றவர். அவர் ஈரோஸ் மற்றும் புலிகளை ஒரு முகாம் ஆகவும். தமிழர் விடுதலைக் கூட்டணி. ஈ.பி. ஆர்.எல்.எப். ரெலோ. ஈ.என்.டி.எல்.எப். புளொட் கட்சியை இந்தியாவுக்கு அருகில் எடுக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் மாலைதீவுக்குப் போனதால் அவர்களை ஓரங்கட்டிவிட்டு இந்த இரண்டு கூட்டினை அமைத்தார்கள்.

தொடரும்...

**நேர்காணல் : மறவன்**



# விளையாட்டுச் செய்திகள்

## ரொனால்டோவின் மகன் பெருமையுடன் வெளியிட்ட பதிவு




தனது மகன் விளையாடிய அல் நசர் ஜூனியர் அணி, U13 செம்பியன் கிண்ணத்தை வென்றது குறித்து ரொனால்டோ பதிவிட்ட ட்வீட் வைரலாகியுள்ளது.

**கிறிஸ்டியானோ ஜூனியர்**

U13 செம்பியன் கால்பந்து தொடரின் இறுதிப்போட்டியில், அல் நசர் அணி 2-0 என்ற கோல் கணக்கில் அல் ஷபாப் அணியை வீழ்த்தி கிண்ணத்தை வென்றது. அல் நசர் அணியில் போர்த்துகல் நட்சத்திரம் ரொனால்டோவின் மூத்த மகன் கிறிஸ்டியானோ ஜூனியர் விளையாடியிருந்தார்.

இந்த வெற்றியின் மூலம் கிறிஸ்டியானோ ஜூனியர் தனது சொந்த பதக்கத் தொகுப்பைத் தொடங்கியுள்ளார். அவர் தனது பிரபலமான தந்தையின் புகழ்பெற்ற அடிச்சுவடுகளைப் பின்பற்ற விரும்புகிறார் என்று கூறப்படுகிறது.

மகனின் வெற்றியால் மகிழ்ச்சியடைந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ (Cristiano Ronaldo), தனது எக்ஸ் பக்கத்தில் "வாழ்த்துக்கள் டீம்" என மகன் கிண்ணத்தை வென்ற புகைப்படங்களை பகிர்ந்துள்ளார். தற்போது ரொனால்டோவின் இந்த பதிவு இணையத்தில் வைரலாகியுள்ளது.

## கார் கண்ணாடியை நொறுக்கிய வீராங்கனை



பெண்கள் பிரீமியர் லீக் (Women's Premier League) கிரிக்கெட் போட்டியில் வீராங்கனை அடித்த சிக்ஸர் பந்தானது கார் கண்ணாடியை நொறுக்கியது.

**பெண்கள் பிரீமியர் லீக்**

05 அணிகள் பங்கேற்றுள்ள 2-வது பெண்கள் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியானது பெங்களூருவில் நடந்து வருகிறது. இந்நிலையில் இந்த தொடரில் பெங்களூரு மற்றும் உ.பி.வாரியர்ஸ் அணிகள் மோதின. இதில், டொஸ் வென்ற உ.பி.வாரியர்ஸ் அணி பந்துவீச்சை தெரிவு செய்தது. அதன்படி, பேட்டிங் செய்த பெங்களூர் அணியில் களமிறங்கிய மந்தனா மற்றும் எல்லிஸ் பெர்ரி சிறப்பாக விளையாடி ரன்களை சேர்த்தனர்.

20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 198 ரன்களை பெங்களூர் அணி எடுத்து. இதில், அதிகபட்சமாக மந்தனா 80 ரன்களும், பெர்ரி 58 ரன்களும் சேர்த்தனர். பின்னர் களமிறங்கிய வாரியர்ஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டை இழந்து 175 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதனால், 3 ரன் வித்தியாசத்தில் பெங்களூர் அணி வெற்றி பெற்றது.

இந்நிலையில், பெங்களூர் பேட்டிங் செய்த போது ஆட்டத்தின் 19வது ஓவரை தீப்தி சர்மா வீசினார். அந்த ஓவரின் 5வது பந்தை எல்லிஸ் பெர்ரி எதிர்கொண்டு சிக்ஸர் அடித்தார்.

அப்போது, அந்த பந்து எல்லைக் கோட்டை தாண்டி சென்று அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மீது விழுந்து கண்ணாடியை நொறுக்கியது. இது தொடர்பான வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

## இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் படைத்த சாதனை



இந்திய கிரிக்கெட் அணி 8 ஆண்டுகளுக்கு பிறகு ஒரு அரிய சாதனையை நிகழ்த்தியுள்ளது. தரம்சாலா மைதானத்தில் இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது டெஸ்டில் இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் இங்கிலாந்து வீரர்களை 218 ஓட்டங்களுக்கு All-Out ஆக்கினர்.

முதல் இன்னிங்சில் அனைத்து இங்கிலாந்து பேட்ஸ்மேன்களும் இந்திய சுழற்பந்து வீச்சாளர்களான குல்தீப் யாதவ், ரவிச்சந்திரன் அஷ்வின், ரவீந்திர ஜடேஜா ஆகியோருக்கு விக்கெட்டுகளை பறிகொடுத்தனர். குல்தீப் 5 விக்கெட்டும், அஷ்வின் 4 விக்கெட்டும், ரவீந்திர ஜடேஜா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

**48 ஆண்டுகளுக்கு பிறகு...**

மூன்று சுழற்பந்து வீச்சாளர்கள் முதல் நாளிலேயே இங்கிலாந்து அணியை வீழ்த்தி 48 ஆண்டுகால சாதனை படைத்துள்ளனர். டெஸ்ட் போட்டியின் முதல் நாளில் முதல் இன்னிங்சில் எதிரணியின் பத்து விக்கெட்டுகளும் சுழற்பந்து வீச்சாளர்களிடம் சிக்கியது இந்தியாவுக்கு இது மூன்றாவது முறையாகும்.

1976-ஆம் ஆண்டு ஒக்லாந்தில் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் முதல் நாளில், இந்திய அணி முதல் இன்னிங்சில் பத்து விக்கெட்டுகளையும் வீழ்த்தியது. 1976க்கு பிறகு (48 ஆண்டுகள் கழித்து) முதல் நாளில் சுழற்பந்து வீச்சாளர்கள் பத்து விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளனர். அதற்கு முன்பு, முதல்முறையாக 1973 ஆம் ஆண்டு சென்னையில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் இதே சாதனையை படைத்தனர்.

## இராணுவ வீரர்களுடன் கிரிக்கெட் வீரர்கள் பயிற்சி

இராணுவ வீரர்களுடன் பயிற்சி பெறுமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி நடைபெற உள்ளதால், உடற்தகுதியை மேம்படுத்த பாகிஸ்தான் வீரர்கள் ராணுவ வீரர்களுடன் பயிற்சி பெற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய தலைவர் Mohsin Naqvi வீரர்களுக்கு தகவல் தெரிவித்துள்ளார். வலிமை மற்றும் உடற்தகுதியை அதிகரிக்கும் நோக்கில் ராணுவ வீரர்களுடன் பயிற்சி மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடைபெறும்.

செவ்வாயன்று இஸ்லாமாபாத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் சில பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் முன்னிலையில் மொஹ்சின் நக்வியின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தற்போது நடைபெற்று வரும் பாகிஸ்தான் சூப்பர் லீக் (Pakistan Super League) போட்டிகள் முடிவடைந்தவுடன் பயிற்சி முகாம் நடைபெறும்.

Pakistan Super League மார்ச் 18 அன்று முடிவடையும். அதையடுத்து மார்ச் 25 முதல் ஏப்ரல் 8 வரை பாகிஸ்தான் ராணுவ வீரர்களுடன் பத்து நாள் முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

உலகக் கோப்பை நெருங்கி வரும் நிலையில், பாகிஸ்தான் வீரர்களின் உடற்தகுதி மற்றும் பலம் பாரிய பிரச்சனையாக உள்ளது என அந்த அணி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## இரட்டை கோல் அடித்த எம்பாப்பே



ரியல் சோசியேடட் அணிக்கு எதிரான போட்டியில் பாரிஸ் செயின்ட் ஜேர்மைன் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

**மின்னல் வேகத்தில் கோல்**

UEFA தொடரின் போட்டியில் PSG மற்றும் Real Sociedad அணிகள் மோதின. விறுவிறுப்பாக தொடங்கி இப்போட்டியின் 5வது நிமிடத்தில், PSG நட்சத்திரம் எம்பாப்பே அடித்த ஷொட் கோல் போஸ்டினை தாண்டி மேலே சென்றது.

அதனைத்தொடர்ந்து, விடாமுயற்சியாக 15வது நிமிடத்தில் மின்னல் வேகத்தில் ஷூட் செய்து கோல் அடித்தார். 29வது நிமிடத்தில் விரைந்து வந்து எம்பாப்பே அடித்த ஷொட்டை, எதிரணி கோல் கீப்பர் அபாரமாக செயல்பட்டு ஒற்றை காலினால் தடுத்தார்.

**தனியாளாக பாய்ந்து கோல் அடித்த எம்பாப்பே**

முதல் பாதியில் PSG அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியின் 56வது நிமிடத்தில், மைதானத்தில் பாதியில் இருந்து தனியாளாக பந்தை கடத்திச் சென்ற எம்பாப்பே, மிரட்டலாக இரண்டாவது கோலினை அடித்தார்.

அதன் பின்னர் ரியல் சோசியேடட் வீரர் பர்ரேனே தலையால் முட்டி கோல் (63வது நிமிடம்) அடித்தார். ஆனால் Goal Chech செய்தபோது அது ஓஃப் சைட் கோல் என தெரிய வந்தது.

எனினும் துடிப்புடன் செயல்பட்ட அந்த அணி வீரர்களின் முயற்சியால் 89வது நிமிடத்தில் கோல் கிடைத்தது. அந்த அணியின் மிக்கேல் மெரினா, இடது காலால் சுழற்றி அடித்து கோலாக மாற்றினார்.

கடைசி மூன்று நிமிடங்களில் PSG தடுப்பாட்டம் ஆடியதால், ரியல் சோசியேடட் அணியில் 2வது கோல் அடிக்க முடியவில்லை. இதனால் PSG அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றது.

# உலக வலம்

## சீன இராணுவத்துக்கு அதிக நிதி

அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக அதிக அளவு தொகையை ராணுவத்துக்காக ஒதுக்கீடு செய்து வரும் நாடு சீனா. இந்த நிலையில், சீனாவில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. இதில் ராணுவத்திற்கான பட்ஜெட் 7.2 சதவீதம் அதிகரிக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

அதாவது, 2024ஆம் ஆண்டில் பாதுகாப்புக்காக 1.6 லட்சம் கோடி யூவான் செலவு செய்யப்படும் என்று பட்ஜெட் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



உலகளாவிய நெருக்கடி மற்றும் அண்டை நாடுகளுடனான பதற்றங்கள் நீடிக்கும் நிலையில் சீனா தனது இராணுவத்திற்கான செலவினங்களை அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டும் இதே அளவுக்கு தனது பாதுகாப்பு பட்ஜெட் நிதி ஒதுக்கீட்டை அதிகரித்திருந்தது.

## இங்கிலாந்து பொருளாதாரம் வேகமாக வளரும்



இங்கிலாந்தின் பொருளாதாரம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் எதிர்பார்த்ததை விட சற்று வேகமாக வளரும் என்று அரசாங்கத்தின் அதிகாரபூர்வ முன்னறிவிப்பாளர் கணித்துள்ளார். வரவு செலவுத்திட்டத்தை நிதி அமைச்சர் முன்வைத்துள்ள நிலையில், அதற்கு பொறுப்பான அலுவலகம் (OBR) பொருளாதாரம் *0.8 வீதம் வளர்ச்சியடையும் என்று கணித்துள்ளது.*

*2025ஆம் ஆண்டிற்கான கணிப்பும் 1.4 வீதத்தில் இருந்து 1.9 வீதமாக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது. "நாங்கள் விரைவில் வளர்ச்சியின் திசையே நோக்கி திருப்புவோம்," நிதி அமைச்சர் ஜெரமி ஹன்ட் தெரிவித்துள்ளார்.*

இங்கிலாந்து கடந்த ஆண்டின் இரண்டாம் பாதியில் மந்தநிலைக்குச் சென்றது. இங்கிலாந்து வங்கி மற்றும் சுயாதீன பொருளாதார வல்லுநர்கள் பலவீனமான வளர்ச்சியைக் கணித்திருந்தனர். இந்நிலையில், இங்கிலாந்தின் பொருளாதாரம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் எதிர்பார்த்ததை விட சற்று வேகமாக வளரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## கனடாவில் அதிகரித்த சைபர் தாக்குதல்கள்

கனடாவின் முக்கிய நிறுவனங்களை இலக்குவைத்து சைபர் தாக்குதல்கள் அதிகளவில் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நாட்டின் நிதி புலனாய்வு பிரிவு இது தொடர்பிலான தகவல்களை வெளியிட்டுள்ளது. கனேடிய பொலிஸ் திணைக்களம் மற்றும் வெளிவிவகார அமைச்சு உள்ளிட்ட நிறுவனங்கள் மீதும் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சைபர் குற்றச்செயல்கள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் நிலையை அவதானிக்க முடிவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த காலங்களை விடவும் தற்பொழுது மிக எளிதில் கனடாவின் பல நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் மீது



சைபர் தாக்குதல்கள் நடத்தப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான தாக்குதல்கள் காரணமாக மக்களின் தனிப்பட்ட தரவுகள் கசியக்கூடிய அபாயம் அதிகரித்துள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இலவச பொருட்களுக்கு தடை விதித்த பிரான்ஸ்

ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் என்னும் சலுகையை பிரான்ஸ் அரசாங்கம் தடைசெய்துள்ளது. உலகம் முழுவதும் வாடிக்கையாளர்களைக் கவர்ந்திழுக்கும் ஒரு சலுகையான இதனை பன்னாட்டு நிறுவனங்களின் சலுகை விற்பனை காரணமாக பாதிக்கப்படும் சிறிய நிறுவனங்களை பாதுகாக்கும் நோக்கில் இத் தடை கொண்டுவரப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அந்நாட்டில் பல்பொருள் அங்காடிகள், குறிப்பிட்ட சில பொருட்களுக்கு 34 சதவிகிதத்துக்குமேல் தள்ளுபடி வழங்க முடியாது என கூறப்படுகிறது.

**புதிய சட்டம்**

இதன்படி குறிப்பிட்ட சில பொருட்களுக்கு 34 சதவிகிதத்துக்குமேல் தள்ளுபடி வழங்க தடை விதிக்கப்பட்டுள்ளதால், ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் என்னும் ஒரு சலுகை இனி அந்த பொருட்களுக்குக் கிடையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டமானது மார்ச் மாதம் 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், உணவுப் பொருட்கள் மீதான இத்தகைய கட்டுப்பாடு கடந்த ஆண்டு மார்ச் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

"தள்ளுபடி அறிவிப்பதால், பொருளின் உண்மையான விலை என்ன என்பது வாடிக்கையாளர்களுக்கு தெளிவாகத் தெரியும் நிலை உருவாவதுடன், தேவைப்படும் பொருட்களை வாங்குவதற்காக கடைக்கு வரும் நிலையில், தள்ளுபடியில் கிடைக்கிறது என்பதற்காக தேவைப்பட்ட பொருட்களை விட ஆசைப்படும் பொருட்களை எல்லாம் அத்தியாவசிய அல்லது உடனடித் தேவையில்லாமல் வாங்கிக்குவிப்பது இதனால் தவிர்க்கப்படும்" என அந்நாட்டு மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.




## இஸ்ரேல் – காசா யுத்தம் : பேச்சுவார்த்தையில் நம்பிக்கையில்லை



காசாவில் போர்நிறுத்த ஒப்பந்தம் இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிக்கும் மற்றும் மூன்று மாதங்களுக்கும் மேலாக சண்டையில் முதல் முறிவு ஏற்பட வாய்ப்பில்லை, இது ரமலான் தொடக்கத்தில் பைடன் நிர்வாகம் நோக்கமாக இருந்தது. பேச்சுவார்த்தைகளை நன்கு அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கெய்ரோவில் பல நாட்கள் நடந்த கூட்டங்களுக்குப் பிறகு இந்த வாரம் வரைவு ஒப்பந்தம் இருக்கும் என்று பேச்சுவார்த்தையாளர்கள்நம்பினர். "ஆனால் அது நடக்காது" என்று விவாதங்களை நன்கு அறிந்த ஒரு இராஜதந்திரி, கடந்த சில நாட்கள் பேச்சுக்களை "மிகவும் பரபரப்பானது" என்று விவரித்தார்.

அடுத்தவார தொடக்கத்தில் புனித மாதத்தின் தொடக்கத்தில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தற்காலிக போர் நிறுத்தத்திற்கு உடன்படுவதற்கான வாய்ப்புகள் நம்பிக்கைக்குரியதாக இல்லை என்று இரண்டு அமெரிக்க அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர். "நம்பிக்கை மங்கி வருகிறது," என்று ஒரு அமெரிக்க அதிகாரி கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் நிர்வாக அதிகாரிகள் ஐந்து மாத கால யுத்தம் தீவிரமடைவதைத் தவிர்ப்பதற்கு ரமழானுக்குள் ஒரு உடன்படிக்கை செய்யப்பட வேண்டும் என்று சில வாரங்களுக்குப் பிறகு அடுத்த சில நாட்களில் ஒரு ஒப்பந்தத்தை எட்டுவதில் தோல்வி ஏற்படும். போர்நிறுத்தம் இல்லாமல் அப்பகுதி "மிகவும் ஆபத்தானதாக" மாறக்கூடும் என்று எச்சரித்தார்.

காசாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இஸ்ரேலிய பணயக்கைதிகள் ரமழானுக்குள் இல்லாவிட்டால், தெற்கு காசாவில் உள்ள ரஃபா மீது இராணுவத் தாக்குதலை நடத்துவோம் என்றும் இஸ்ரேல் எச்சரித்துள்ளது. அங்கு சுமார் 1.5 மில்லியன் பாலஸ்தீனியர்கள் சண்டையில் இருந்து பாதுகாப்பு பெற முயற்சிக்கின்றனர்.

## புதிய தகவலால் மீண்டும் தேடப்படும் விமானம்

கடந்த 2014, மார்ச் 8-ம் திகதி கோலாலம்பூரில் இருந்து மலேசியா நோக்கி புறப்பட்ட எம்.எச்.370 என்ற விமானம் ரேடார்களில் இருந்து காணாமல் போனது. ரேடார்களில் இருந்து மாயமான எம்.எச்.370 விமானம் எங்கு சென்றது, அதில் இருந்தவர்கள் நிலை என்ன என்ற கேள்விகளுக்கு இதுவரை பதில் இல்லை.

மாயமான மலேசிய விமானம் எம்.எச்.370-ஐ தேடும் பணிகளை மீண்டும் துவங்கவேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் எழ துவங்கியது. இந்த நிலையில், ஆஸ்திரேலியா சென்ற மலேசிய பிரதமர் அன்வர் இப்ராகிமிடம் மாயமான விமானத்தை தேடும் பணிகள் குறித்த கேள்வி எழுப்பப்பட்டது.



அதற்கு பதில் அளித்த மலேசிய பிரதமர் அன்வர் இப்ராகிம், "தேடல் தொடர்பாக உறுதியான ஆதாரம் ஏதேனும் கிடைக்கும் பட்சத்தில், மீண்டும் தேடும் பணிகளை துவங்குவதில மகிழ்ச்சி அடைவோம். இந்த விவகாரத்தில் தொழில்நுட்பகோளாறு இருக்கும் என்று நினைக்கவில்லை. "மக்களின் உயிரை பாதிக்கும் விவகாரம் இது. இதற்காக என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ, அவற்றை நிச்சயம் செய்தாகவேண்டும்," என்று தெரிவித்தார்.

முன்னதாக காணாமல் போன மலேசிய ஏர்லைன்ஸ் விமானம் 370ஐ கண்டுபிடிக்க புது திட்டம் உள்ளதாக ஆய்வாளர்கள் அறிவித்திருந்தனர். லண்டனில் உள்ள ரோயல் ஏரோனோடிக்கல் சொசைட்டியில் நடைபெற்ற விரிவுரையில் புதிய வகை தேடலின் மூலம் பத்து நாட்களில் காணாமல் போன விமானத்தை கண்டுபிடிக்க முடியும் என்று வான்வெளி துறை நிபுணர்கள் ஜீன்-லூக் மார்சண்ட் மற்றும் விமானியான பேட்ரிக் பெல்லி தெரிவித்துள்ளார்.

# பூமியின் மையப்புள்ளியில் இருக்கும் நாடு

அறிவியலின் படி, பூமியின் உச்ச மையத்தில் தெற்கு அட்லாண்டிக் பெருங்கடல் உள்ளது. அதற்கு மிக அருகில் உள்ள நகரம் கானாவின் தகோராடி ஆகும்.

கானா ஆப்ரிக்க நாடுகளில் ஒன்றாகும். ஆப்ரிக்கக் கண்டத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. வானியலாளர்களின் கூற்றுப்படி, கானா நாடு பூமியின் மையத்திலிருந்து 380 மைல் தொலைவில் உள்ளது.

அதனால்தான் இந்த இடத்தை பூமியின் அடையாளமாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஆப்ரிக்கா கண்டத்தில் உள்ள இந்த கானா நாட்டின் வரலாறு மிகவும் மர்மமானது. நடுவில் இருப்பதால், இங்குள்ள வளிமண்டலம் முற்றிலும் வேறுபட்டது.

உலகின் மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது, இங்கு அதிக வெப்பம் நிலவுகிறது. மே, ஜூன் ஆகிய மாதங்களில் அதிக வெப்பம் நிலவுவதால், வெளியில் சென்றால் தீயில் எரியும் அளவிற்கு வானிலை நிலவுவதாக தெரிகிறது.

கானா ஒரு காலத்தில் மிகவும் வளமாக இருந்த நாடு. இங்கு தங்கச் சுரங்கங்கள் இருந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். உலகம் முழுவதும் விநியோகிக்கக்கூடிய அளவுக்கு இங்கு தங்கம் இருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆனால் அந்த தங்கச் சுரங்கங்களைப் பிடிக்க போர்ச்சுகீசியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே பல போர்கள் நடந்ததாகவும் வரலாறு உண்டு.

மேலும், கானா மக்களின் வாழ்க்கை முறை மிகவும் சுவாரஸ்யமானது. அங்கு பலர் வண்ணமயமான ஆடைகளில் காணப்படுவார்கள். கானா, மனிதனால் உருவாக்கப்பட்ட வோல்டா ஏரியின் தாயகமாகும். வோல்டா ஏரி பரப்பளவில் உலகின் மிகப்பெரிய ஏரி ஆகும்.

கொள்ளளவு அடிப்படையில், இது உலகில் நான்காவது மிகப்பெரிய ஏரியாக சொல்லப்படுகிறது. பல ஆண்டுகளுக்கு முன்னர், நீர் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக இந்த ஏரி முதன்மையாக உருவாக்கப்பட்டது. தற்போது, 34 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வசிக்கும் கானா, மேற்கு ஆப்ரிக்காவில் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நாடாகும்.

# மிருகக் காட்சி சாலையொன்றில் நிகழ்ந்த சோகம்

கனடாவின் கல்கரி மிருகக்காட்சி சாலையொன்றில் மயில் ஒன்று உயிரிழந்த சம்பவம் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. கல்கரியின் மிருகக்காட்சி சாலையில் வாழ்ந்து வந்த மயில் ஒன்று 17ம் வயதில் உயிரிழந்துள்ளது.

நோர்மன் என்ற மயிலே இவ்வாறு உயிரிழந்துள்ளது. நோர்மனின் மரணம் தொடர்பில் கல்கரி மிருகக்காட்சிசாலை நிர்வாகம் ஆழ்ந்த இரங்கல் வெளியிட்டுள்ளது. கடந்த 2006ம் ஆண்டில் மிருகக் காட்சிசாலையில் இந்த மயில் பிறந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# 1 மில்லியன் ஆண்டு பழமையான கல் கண்டுபிடிப்பு



ஒரு புதிய ஆய்வின்படி, உக்ரைனில் கண்டுபிடிக்கப்பட்ட கல் கருவிகள், 1.4 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தையவை. ஐரோப்பாவில் மனிதர்களின் ஆரம்ப உறுதியான ஆதாரமாக இருக்கலாம்.

ஹோமோ சேபியன்ஸ் ஒருவேளை இந்த கருவியை உருவாக்கவில்லை. மாறாக, அவர்கள் நெருங்கிய மற்றும், நிச்சயமாக, அழிந்துபோன, உறவினர்களால் செய்யப்பட்டனர்.

நேச்சரில் வெளியிடப்பட்ட ஆய்வின்படி, இந்தக் கருவிகள் ஐரோப்பாவில் பண்டைய மனிதர்களால் உருவாக்கப்பட்ட மிகப் பழமையான கலைப்பொருட்கள் ஆகும்.

எனவே நமது ஆரம்பகால உறவினர்கள் எப்படி, எப்போது அங்கு வந்தார்கள் என்பதைப் பற்றி சொல்ல முடியும். இந்த ஆரம்பகால வருகையாளர்களில் சிலர், ஹோமோ எரெக்டஸைச் சேர்ந்தவர்கள், கிழக்கிலிருந்து ஐரோப்பாவிற்கு வந்து மேற்கில் பரவியிருக்கலாம் என்ற கோட்பாட்டை ஆராய்ச்சி ஆதரிக்கிறது.

"இதுவரை, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இடம்பெயர்வதற்கு வலுவான ஆதாரம் எதுவும் இல்லை. இப்போது எங்களிடம் உள்ளது," என்று ப்ராக்கில் உள்ள செக் அகாடமி ஒ.ஃப் சயின்ஸின் தொல்பொருள் ஆய்வாளரும், கட்டுரையின் இணை ஆசிரியருமான ரோமன் கர்பா ஒரு செய்தி அறிக்கையில் கூறினார். ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, சில்லு செய்யப்பட்ட கருவிகள் பெரும்பாலும் இறைச்சியை வெட்டுவதற்கு அல்லது விலங்குகளின் தோலை துடைக்க பயன்படுத்தப்படுகின்றன.

# நிலவில் அணு உலை





மின்சார தேவையை பூர்த்தி செய்யும் வகையில், நிலவில் அணு உலையை நிறுவுவதை நோக்கமாகக் கொண்ட திட்டத்தை ரஷ்யாவும் சீனாவும் ஆலோசித்து வருவதாக ரஷ்யாவின் விண்வெளி நிறுவனம் கூறியுள்ளது.

நிலவில் மக்கள் வாழ்வது குறித்து, பல நாடுகள் ஆராய்ச்சிகள் மேற்கொண்டு வரும் நிலையில், நிலவில் மக்கள் குடியமர்ந்தால், அவர்களுக்கு தேவையான மின்சாரம் வழங்குவதை உறுதிப்படுத்தவும், சோலார் பேனல்கள் போதுமானதாக இருக்காது என்று கூரிய ரஷ்யாவின் விண்வெளி ஏஜென்சியின் தலைவர் யூரி போரொசோவ் (Yury Borisov), இதனை கருத்தில் கொண்டு, ரஷ்யா நிலவில் அணு உலை அமைப்பது குறித்து தீவிரமாக ஆலோசித்து வருவதாக குறிப்பிட்டார்.







இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 10.03.2024 அன்று வெளியிடப்பட்டது.